
# தேசாதிபதி

"DESATHIPATHI" ✻ MARCH 1964


ஸ்ரீரங்கம் வாலிபர் மாநாட்டுத் தலைவர்




திரு. V. சுந்திரமூர்த்தி செட்டியார் அவர்கள்
(சென்னை மாநகராட்சி மன்ற முன்னாள் உறுப்பினர்)

அலுவலகம் :
51, பிடாரியார் கோவில் தெரு, சென்னை—1.

# நகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்



திரு. V. நமசிவாயம்
பொள்ளாச்சி (5-வது, வார்டு) தி. மு. க.



திரு. R. V. வெங்கிடாசலபதி
ஈரோடு (18-வது, வார்டு) காங்கிரஸ்

24-மனை தெலுங்கு செட்டியார் மாகாண மகாஜன சங்கத்தின் அதிகாரபூர்வமான மாதப் பத்திரிகை.

# தேசாதிபதி

ஆசிரியர் : தேசம் R. சென்னி செட்டியார், அரூர்

| மலர் 1 | மார்ச் 1964 | இதழ் 5 |
|---|---|---|

## வேண்டுகோள்!

நம் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் 'தேசாதிபதி' பத்திரிகையின் ஐந்தாவது இதழ் இன்று உங்கள் கரங்களிலே தவழ்கிறது.

'தேசாதிபதி'யின் நல்ல கட்டுக்கோப்பும், கவர்ச்சியும் சமூக மக்கள் அனைவரையும் பெத்த மகிழ்ச்சியில் ஆழ்த்தி வருகிறது என்பதை நாம் அறிகிறோம்.

ஆனால், ஒவ்வொரு மாதமும் ஏறக்குறைய 2000—பேருக்கு தபாற் செலவையும் பொருட்படுத்தாமல், நாம் 'தேசாதிபதி'—பத்திரிகையை அவரவர் இல்லங்களுக்கே நேரடியாக அனுப்பி வைத்திருந்தும், இதுவரை அவர்களில் பெரும்பாலோர் சந்தாத் தொகையை அனுப்பி உதவாமல் அலட்சியமாக இருப்பது நமக்கு பெரும் ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் அளிக்கிறது.

பத்திரிகைக்கு சந்தா சேர்த்துத் தரும் முயற்சியில் சமூகாபிமானிகள் அவ்வளவாக ஆர்வம் காட்டாமலிருப்பதும், ஒவ்வொரு இதழுக்காகவும் நாம், கைப்பொருள் ஈடுகொடுக்க வேண்டிய நெருக்கடியும் 'தேசாதிபதி'யின் பயணத்தைத் தடைபடுத்தி விடுமோ என்றும் அஞ்சுகின்றோம்'

ஆகவே, அடுத்த இதழ் தொடங்கி, இனி மாதா மாதம் சந்தாதாரர்களுக்கு மட்டுமே பத்திரிகை அனுப்பி வருவது என்று திட்டமிடப்பட்டிருப்பதால், இதுவரை பத்திரிகைக்கு சந்தாத் தொகை அனுப்பாதிருப்பவர்கள் இந்த வேண்டுகோளை கண்ணுற்றவுடன் அருள் கூர்ந்து சந்தாவை அனுப்பி வைத்து, நமது முயற்சிகளுக்கு மேலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்துதவக் கோருகின்றோம்.

# ஸ்ரீ காமாக்ஷி அம்மன் பதிகம்

பாலமேடு *K.* அங்கமுத்து செட்டியார்
அவர்கள் இயற்றி அருளியது,

நம் குல தெய்வமாகிய ஸ்ரீ காமாட்சி அம்பிகையின் மீது, வடமொழியிலும் சரி, தென்மொழியிலும் சரி, அவ்வப்போது புலவர் பெருமக்களால பாடப்பெற்ற நூல்கள் பல உண்டு. அதே வரிசையில் எண்ணத் தக்கதாய், ஏறக்குறைய முப்பது ஆண்டுகளுக்கு முன், அதிலும் நம்குலத் தோன்றல் பாலமேடு திரு. கே. அங்கமுத்துச் செட்டியார் என்னும் புலவர் பெருமான் ஒருவராலேயே பாடப்பட்டு, 1933-ம் ஆண்டு வெளி வந்த பாடல் நூல் இது என்னும் முறையில் 'தேசாதிபதி'யில் இந்தப் பாடல்களை வெளியிடுவதில், பெருமையடைகிறோம்.

பாடல்களைத் தமிழிலேயே பாடியுள்ள கவிஞர், தாயாகிய அம்பிகையை விளிக்கும் பொழுதுமட்டும் அதைத் தன் தாய்மொழியாகிய தெலுங்கிலேயே விளித்தால் சிறக்குமென்று கருதித் 'தல்லி காமாக்ஷியுமையே' என்று ஒவ்வொரு பாடலின் முடிவிலும் குறிப்பிட்டிருக்கும் நயம் படித்து மிகவும் இன்புறுவதற்கு உரியது.

—ஆசிரியா.

## காப்பு

அன்னைகா மாக்ஷிபதம் அன்பினுற் போற்றுதற்குப்
பன்னுநூற் பாவலர்தம் பற்றுவான்—மன்னியசீர்க்
கந்தனுக்கு முன்னுதித்த காமர் விநாயகனும்
தந்திமுகன் ருளேசரண்.

## ஆசிரிய விருத்தம்.

சீர்தங்கு சடிலன்றன் றிருமேனி பிரியாத
        சிற்சக்தி தெய்வமாகித்
தினநாதன் நிசிநாதன் திசை நாதரோரெட்டு
        திண்டிறற் சீதவரையும்
நீர்தங்குகடலேழும் நிலைநின்ற நிலமைந்தும்
        நிறைவுற்ற விண்ணி னிலவும்
நிரைகொண்ட நவகோளும் நிமிர்கின்ற தருராசி
        நீள்விலங் காதி பலவும்
ஏர்தங்கு நினதுதரா மிடையிட்டு வெளியிட்ட
        எமதன்னை என்ப ருன்னை
எந்நாளு முன்பாத மலர்மீது முடிசூடி
        ஏத்தினர்க் கின்ப மருள்வாய்
தார்தங்கு திரிலிங்க தேசாதிபதிச் செட்டி
        மார்தக்க தாயும் ஆனேய்
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
        தல்லிகா மாக்ஷி உமையே. (1)

அலையாழி சூழ்வுற்ற வவனிக்கு னையன்றி
அனுதாபி எவரு முண்டோ
அக்கால முதலாக இக்காலம் வரை எங்கள்
அன்னைநீ யாதி அலவோ
கலையாலும் மறையாலுங் கரைகாண வரிதான
கனலொத்த கற்பின் வடிவே
கண்ணின்று விண்ணின்று கனல்கின்ற கதிரான
கண்பாடக் ககன மலரே
மலையார முலையாத மணியாரம் அணிசெய்ய
மகிபால ரான முன்னோர்
மனமார வுனைநாடி வழியாக வந்திக்க
மண்டலத் தாட்சி தந்தாய்
தலைநாளி னளிபோலத் தமியேனை யாட்கொண்டு
தாழாது தஞ்சம் அருள்வாய்
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லி காமாக்ஷி உமையே. (2)

மதிகண்ட கடல் போலும் மழைகண்ட மயில் போலும்
மகிழ் கொண்டு பாடியாடும்
மறைஞான முனிவர்க்கும் மதிவாணர் புலவர்க்கும்
மன்னுதா யான வுனது
துதிகொண்ட பதபூஜை துணைநின்று துரிசற்ற
துரியநிலை தோன்ற வருமே
துரைராஜன் வரைராஜன் தொழவந்த தவபுத்ரீ
தோமிலாப் பச்சை மயிலே
குதிகொண்ட நதிசூடி கொழுகொம்பு தனைநாடி
குடியேறு கோதில் கொடியே
குணமொன்று மில்லாத குடிகேடன் ஆனாலும்
குற்றமாய்க் கொள்ளல் அறமோ
ததிகொண்ட கடன்மீது தகைகொண்ட துயின்மண்டு
ஜகன்னாத னரிய தங்காய்
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (3)

காலாறு மனையார்கள் களிர்காடு தனைவிட்டு
நற்றெண்டை நாடு சேர்ந்து
நறைநாறு மலராலும் நவைதீரு பொருளாலும்
நன்னுதா லுன்னை நாளும்
வாலாய மாய்நம்பி வந்திக்க நீதந்த
வண்மைக்கு வையம் நேரோ
வனமாலி தனையொத்த வடிவுற்ற வபிராம
வல்லிநின் மாயம் அறியேன்
பாலாறு பாய்ந்தென்னப் பரஞான வமுதூட்டிப்
பத்தர்க்கு முத்தி தந்தாய்
பலனென்று மறியாத படிறுற்ற மரபஞ்ச
பாதகப் பண்பனி வனிற்
றுலால மதுநீக்கித் தாயென்ன நீவந்து
தற்போத ஞான மருள்வாய்
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (4)

தேசங்க ளுலகங்கள் சிறைகொண்டு திறைகொண்ட
திரிலிங்கர் தெய்வம் நின்னை
சிவகாமி அபிராமி திரிசூலி பரிபாலி
சித்பரா சக்தி எனவே
வாசங்கொ ளதிபுங்க மலர்கொண்டு முனம்நின்று
வந்திக்க வாழ்வு தருவாய்
வளமல்கு மலர்மாது கலைமாது வருணித்து
வாழ்த்துவா ருன்னை வறியேன்
நேசங்கொ ளுளம்வைத்து நிஜபக்தி புரியாது
நிலைகெட்டு நிற்ப தெவனோ
நீபெற்ற சேய்தன்னை நினையாது நீதள்ளல்
நீதமோ நித்ய நிறைவே
தாசன்றன் னுளமேவு தளர்வோடு மாறுன்றன்
சாந்நித்ய சதனம் அருள்வாய்
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (5)

வானத்தின் மீனென்ன வருவார்கள் போவார்கள்
வையத்தில் வாழ்வு முண்டேல்
வளனற்ற காலத்து வரவற்று வுறவற்று
வாய்கொடா மூக ரனைவார்
ஊனத்தி னெடுவந்த வுடல்பெற்ற வமரர்வா
மூலகத்தி னியல்பி தென்றே
உணர்வுற்ற பினுமுன்றன் உயர்பத்தர் பதபூஜை
உன்னிநா னுய்வு பெறுவான்
ஞானத்தி னிடைநின்ற நவிரற்ற மாமாய
ஞாதத்தி னன்மை அறியா
நவையுற்ற அவநீத ஞாயத்த னனுறும்
நல்லை நீ நலிதல் நலமோ
தானத்தின் முறைபேசு சதுர்வேத முடிமீது
தனிநின்ற தத்வ மணியே
தரைபேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (6)

வாளாலும் வலியாலும் வையங்க ளூறமோதி
வலம்வந்த கொற்ற மறவோன்
வரைமேவு திரிகோண கிரிசூழும் வளநாடு
வாசமாய் வைத்த வளவோன்
தோளாற்று டரேழு தூணெத்த துணைகொண்டு
தொலைவித்த சொர்ண வரைமேல்
துகிரொத்த சடையண்ணல் சுகமொத்த மொழிமெல்லி
துய்யதா ளென்றும் மறவான்
கேளான கிளைஞன்றன் துணைநின்ற திரிலிங்கர்
கெழுமியுல கோம்பு நாளில்
கேளாத முன்வந்து கெதிதந்து ரக்ஷித்த
கெவுரிமா தேவி யுனதோ
தாளாலென் முடிசூடி தளர்வுற்ற தனயற்குன்
சௌபாக்ய சதனம் அருள்வாய்
தரைபேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (7)

அங்குற்ற அமரர்க்கும் அவனிக்கு ளனைவர்க்கும்
அமுதொத்த வன்னை நின்னை
அறநேயர் மறநேய ரரவிந்த வடிபற்றி
யாச்சியா நிற்ப ரறிவால்
பொங்குற்ற காலத்துப் பொன்னுலு மணியாலும்
பூஜிப்பர் பொய்ம்மை நெறியார்
பொருளற்ற காலத்தும் புரிதொண்டு குறையாது
புல்குவார் புன்மை அறியார்
எங்குற்ற காலத்தும் எண்மூன்று மனையார்கள்
எம்மம்ம என்று நிசமும்
எழில்பெற்ற அடிமீது முடிசூடி மலர்சூடி
ஏத்துவா ரின்ப முறவே
தங்குற்ற தரணீச தனபாலர் தாயான
சன்மார்க்க தன்ம வடிவே
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (8)

வேதங்க ளொடுதக்க விதிபெற்ற கலைஞான
விகிர்தங்க ளுன்னை மிகவும்
விரிவுற்ற சொற்கொண்டு விதிநாதர் மூவர்க்கும்
வித்துநீ என்ன மொழியும்
பேதங்கொள் ஓராறு பேசுற்ற சமயங்கள்
பெற்றுளில் பேத முறுமோ
பெண்ணன்று கண்ணென்று பெருவாரி வையத்தில்
பேசுவார் பின்ன மறவே
ஓதங்கொள் கடல்போலும் ஒளிர்பச்சை வண்ணத்தை
ஒப்பிட்டுச் சொல்ல வொலுமோ
உயர்தேவர் முதலாய பதிதேவர் எல்லாரும்
உன்னருட் சத்தி விழைவார்
தாதன்றன் முடிமீதுன் சரணார விந்தத்தைத்
தாழாது சார்த்தி அருள்வாய்
தரையேழு முரையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (9)

முற்கால முதலாகப் பிற்காலம் வரைமூவர்
முனிவோர்கள் முற்றும் உனையே
முழுஞான முதல் எனறும் முதுதேவ பலமென்றும்
முன்முனைப் பூஜை புரிவார்
நற்காலம் ஏதுமெவன்று நான்நாடிச் சிந்தித்து
நல்லன்னை நின்னை மறவா
நாளிந்த ஞாலத்தில் நலனுற்ற நாளென்று
நாயனேன் கண்டு தெளியேன்
பொற்கால மிதுவென்று பொருளன்று நீயென்று
போற்றாத புன்மை மதியோர்
பொருளற்றுத் தெருளற்றுப் பொலிவற்று நலிவுற்றுப்
பொன்றுவா ரிந்த வுலகில்
தற்கால முனைநாடு தமியேனை யாட்கொண்டு
தாழாது தஞ்சம் அருள்வாய்
தரையேழு முறையாடு தனிகாஞ்சி புரமேவு
தல்லிகா மாக்ஷி உமையே. (10)

---

## ஏழடி வேற்றொலி வெண்டுறை.

படியளப்பான் சோதரியைப் பராபரையைக்
காமாக்ஷிப் பாதந் தன்னை
முடியளப்பான் முழுமனதாற் போற்றிடுவார்
மும்மையினும முறைசேர் செல்வம்
பெற்றுவான் மக்களும் பெட்புசேர் பெண்டிரும்
சுற்றிவாழ் சுற்றமும் சோர்விலாக் கேளிரும்
மற்றுளார் யாவரும் மன்னிவாழ் மாண்பினற்
கொற்றமார் வேலினன் கொண்டலா னிண்டெனக்
கற்றைவார் சடையினன் கைலைபோல் வாழ்வாரே.

## சிந்தியல் வெண்பா.

வாழியர் வாழியர் வாழியர் வாழியர்
ஆழிமாற் றங்கைகா மாக்ஷி அருட்பதம்
காழிகா ணூளும் நயந்து (1)

மங்களம் மங்களம் மங்களம் மங்களம்
பொங்குநீர்க் கம்பைகா மாக்ஷிப் பொலன்கழல்
சிங்கல றச்சீயத் துயர்ந்து (2)

சோபனம் சோபனம் சோபனம் சோபனம்
ஸ்ரீபதி சீர்த்தங்கை காமாக்ஷித் திருப்பதம்
பாபமறப் பண்பிற் பணிந்து. (3)

— முற்றும் —

# வாழ்த்துகிறார்கள் !

**திரு. M. குப்புசாமி செட்டியார்; சிங்காரத்தோட்டம், சென்னை-21.**

"தேசாதிபதி" மிகவும் கவர்ச்சியான முறையில் வெளி வந்திருக்கிறது. இப்படி ஒரு பத்திரிகை நம் முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமே. கஷ்ட நஷ்டங்களை பொருட்படுத்தாமல் இந்த முயற்சியில் தைரியமாக ஈடுபட்டு சேவை செய்துவரும் நமது மாகான மகாஜன சங்கத்தாரையும், தலைவர் திரு. ஆர். சென்னி செட்டியார் அவர்களையும் மனதார பாராட்டுகிறேன். "தேசாதிபதிக்கு" என் வாழ்த்துக்கள்.

**திரு. G. ஜெயராமன் செட்டியார்; கல்மண்டபம், சென்னை-13.**

"தேசாதிபதி" ஜனரஞ்சகமாக வெளியிடப்பட்டுள்ளது. சமூக முன்னேற்றம் சம்பந்தமான நல்ல கட்டுரைகள், கவிதைகள் "தேசாதிபதி' பத்திரிகையை அழகு செய்கின்றன. அடுத்து வரும் இதழ்களில் சிறு கதைகள்—தொடர் கதைகள் வெளிவர ஆசிரியர் ஆவன, செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன். நல்ல உலகச் செய்திகளை சேர்த்து வெளியிடுவதும். "தேசாதிபதி"க்கு சிறப்பையே அளிக்கும். "தேசாதிபதி" தொடர்ந்து சமூக நலனுக்குச் சேவை செய்ய, அறு நான்கு மனையார்களின் உதவியும் ஒத்துழைப்பும் என்றும் நீடித்து இருக்கக் கோருகின்றேன்.

**திரு. K. சுப்பிரமணியம் (சிவம்), சங்கரிதுர்க்கம்.**

நம் குல "தேசாதிபதி" மாத இதழ் கிடைக்கப் பெற்று மட்டற்ற மகிழ்ச்சி யடைந்துள்ளேன். குல முன்னேற்றத்திற்கு ஏற்ற வகையில் நல்ல கருத்துக்களை வெளியிட்டு வரும் ஏடு எல்லா வகையிலும் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இயற்கை அருள்புரிய வேண்டுகின்றேன்.

**திரு. S. S, மாரிமுத்து செட்டியார், சங்கரிதுர்க்கம்.**

நம் இன முன்னேற்றத்திற்காக செயல்பட முன்வந்திருக்கும் "தேசாதிபதி" மாத இதழ் சிறப்பாகவும் சிந்தனைக்குத் தூண்டுகோலாகவும் அமைந்திருக்கிறது. நம் இனத்தவர்களிடையே "தேசாதிபதி"யின் தொண்டு ஓங்கி வளரவும்-வாழவும் இறைவன் அருள்பாலிக்க விழைகிறேன்.

**திரு. K. V. ராஜாகிருஷ்ணன், ஈரோடு.**

நமது மாகாண மகாஜன சங்கத்தின் சார்பில் வெளிவரும் 'தேசாதிபதி' மாதப் பத்திரிகை நம் குல மக்களுக்கு ஏற்ற முறையில் சேவை செய்யுமென்று நம்புகின்றேன். 'தேசாதிபதி' தொடர்ந்து பணியாற்ற அன்னை ஸ்ரீ காமாட்சி துணைபுரியவும் விழைகின்றேன்.

# சூரியனும் - குழந்தைகளும்

ஜீவராசிகள் அனைத்தும் கதிரவனை நேசிக்கின்றன. உலகிலுள்ள ஒவ்வொன்றுக்கும் உயிர் அளிப்பது கதிரவனே யாவான். குழந்தைகளும் சூரியனை நேசிக்கிறார்கள்.

வெயில் மக்களுக்கு இதமளிக்கிறது. உடலுறுப்புக்களுக்கு—முக்கிய மாகக் குழந்தைகளின் உடலுறுப்புக்களுக்கு அதுமிக்க நன்மை பயக்கிறது. சூரியன் நமக்கு வெப்பத்தையும் (சிவப்புக் கீழ்க் கதிர்கள்) ஒளியையும் அளிக்கிறது. அதனுடைய ஊதா மேற் கதிர்கள் பல்வேறு நோய்களை உண்டாக்கும் கிருமிகளைக் கொன்றுவிடும் ஆற்றல் படைத்தவை.

ஆனால் வெளியிலேயே குழந்தை நெடுநேரம் இருந்துவிட்டால் அதனால் குழந்தைக்குத் தீமைகளும் ஏற்படக் கூடும். சூரியனுடைய கதிர்கள் மிகவும் காரமான மருந்து போன்றவை. எனவே, அதை அளவோடுதான் உபயோகிக்க வேண்டும்.

எனினும் பெற்றோர்கள் தம் குழந்தைகளை நாள் பூராவும் வெயிலில் இருக்க அனுமதித்து விடுகிறார்கள். ஆனால் குழந்தைகளின் உடல், குறிப் பாக சிறிய குழந்தைகளின் உடல், பெரியவர்களின் உடலைவிட மிக துரிதமாக சூடேறி விடுகிறது. இவ்விதம் சூடு அதிகமாகி விட்டால், குழந்தைகள் அயர்ந்து களைத்துப் போவார்கள்; பசி மந்தம் ஏற்படும்; நன்றாகத் தூங்க மாட்டார்கள்; வயிற்றுப் போக்கு ஏற்படும்; தொத்து நோய்களுக்கு, மிகச் சுலபமாக இரையாகி விடுவார்கள்.

குழந்தை வெகு நேரம் வெயிலில் இருக்க நேர்ந்தால், உடல் வெப்பம் மிகவும் அதிகமாகி, அதற்கு அவன் பலியாக நேரிடும்.

நன்றாக வெயில் அடிக்கும்போது, நீண்ட விளிம்புடைய மென்மை யான தொப்பிகளைக் குழந்தைகளுக்கு அணிவிக்க வேண்டும், பிரகாச மான வெயிலிலிருந்தும், ஊதா மேற் கதிர்களிலிருந்தும் இந்த விளிம்பு குழந்தைகளின் கண்களைப் பாதுகாக்கும்.

சிறிய குழந்தைகளை நேரடியாக வெயிலில் படுக்க வைக்கக்கூடாது. இரண்டு மூன்று வயதான குழந்தைகள்கூட மிகக் கொஞ்ச நேரத்திற்குத் தான் வெயிலில் விளையாடலாம்,

நன்றாக வெயில் அடிக்கும்போது மர நிழலிலோ அல்லது கூடாரங் களின் கீழோ குழந்தைகள் விளையாடலாம். அது அவர்களுக்கு மிகவும் ஆரோக்கியமானது. நேரடியாக வெயில் அடிக்காவிட்டாலும், குழந்தை களுக்குப் போதுமான அளவு ஊதா மேற் கதிர்கள் கிடைத்துவிடுகின்றன. சிவப்புக் கீழ்க் கதிர்கள் குறைவாகக் கிடைப்பதால், குழந்தைகளின் உடல் அதிகமாக சூடேறிவிடும்-அபாயமில்லை. —சோவியத் நாடு

# பாசம் பிறந்ததம்மா!

திரு R. T. சிவாஜி, திருச்சி.

நானும் ஒரு கல்லூரியில் ஆசிரியைதான், ஜானகியைவிட மூன்று வயது மூத்தவள். மேலும் அவளைவிட அதிகம் படித்தவளும், முன்பே வேலைக்குச் சேர்ந்து அதிகச் சம்பளம் பெறுபவளும் நான்தான்.

ஜானகி கல்லூரியைவிட்டு வெளியே வரும் போது; அன்றலர்ந்த மலர்போல் சிரித்த முகத்துடன் அன்பு பொங்க வருவாள்! அவளைச் சுற்றி மொய்க்கும் இளம் வண்டுகளென மாணவர்களின் குப்பல் வரும். ஆனால் என்னிடமோ! எந்த மாணவரும் ஒட்டுவதில்லை! என் ஆடையிலே, அலங்கார அஜந்தா கொண்டையிலே, உதட்டு சாயம் முதல், நெற்றியில் தேன் துளி பொட்டுவரை, உடல் பிடிப்பான சோளியிலிருந்து, எடுப்பான, பார்டர் வைத்த புடவை வரையில், எழில் மிக்க ராணியாகத்தான் நான் இருந்தேன்

சில நேரங்களில் சில மாணவிகள் என் காதில் விழுந்தும் விழாத வண்ணம் பேசுவதையும் நான் கேட்டிருக்கிறேன்,

"ஜானகி மிஸ்ஸைவிட, கோமதி மிஸ் தான்டி அழகு—சிரித்தாலோ, கன்னத்திலே என்ன அழகா குழி விழுது"

"போடி!—ஜானகி மிஸ், கண்ணுக்கு இடும் மைக்கு ஈடாகாதபடி கோமதி மிஸ்ஸோட கண்கள்!"

"யேய்—இவளே!. என்ன இருந்தாலும், கோமதிமிஸ் நடக்கறதைப் பார்த்தால், தேவதை கதைகளில் வரும், அரசியாகத்தாண்டி தோணுது!'

"எத்தனைதான் நடக்கட்டுமேடி ஜானகி மிஸ்ஸோ-ட-அந்த அன்பான குரலுக்கு ஈடு உண்டாடி!'

இப்படிப் பல முறை மாணவிகள் என்னையும், ஜானகியையும் ஈடு காட்டி பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அவளிடம் இல்லாத மேனியின் கவர்ச்சி என்னிடம், என்னிடம் இல்லாத கண்களின் புன் சிரிப்பும் கவர்ச்சியும் அவளிடம்.

ஜானகியிடம எனக்குத் தனிப்பட்ட வகையில் எவ்வித பொறாமை யும், வெறுப்பும் கிடையாது. ஆனால் இப்படி ஈடுகாட்டி பேசியே மாணவிகள் என் மனதில் தாங்கொணாத் தாபத்தை இன்னதென்று விவரிக்க முடியாத உணர்ச்சியை உருவாக்கி விட்டனர்.

ஒருநாள்—கல்லூரி இடை வேளை நேரத்தின்போது நான் சற்று ஓய்வாக என் அறையில் அமர்ந்து ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தேன். அப்போது என்னைத் தேடி என் அறைக்கு வந்தாள் மீனலோசனி! அவள் என் அன்புக்கு பாத்திரமான மாணவிதான். ஏதோ சந்தேகம் கேட்க வந்தவள். என் முகத்தைப் பார்த்ததும்

"மிஸ் நான் அப்புறம் வரேன்! வரட்டுங்களா-என்று கூறிக் கொண்டே புறப்பட்டாள். நானும் அவளை நிறுத்தி "என்ன சந்தேகம்

கேள்!' என்று அவளிடம் கேட்கத்தான் எண்ணினேன். ஆனால் ஏனோ! அப்படிக் கேட்காமல் இருந்து விட்டேன்.

என் அறையைவிட்டு வெளிக் கிளம்பி நான் தோட்டத்தின் பக்கம் செல்லும் பொழுது, அங்கு மரத்தடியில் இரு குரல்கள் கேட்டன! ஒன்று ஜானகி! மற்றது மீனலோசனி. குறிப்பிட்ட பாடத்தில் சந்தேகத்தை மனோதத்துவரீதியாக விவாதித்துக் கொண்டிருந்தாள் ஜானகி! சிரிப்பும் கும்மாளமும் குதிப் போட்டுக் கொண்டிருந்தது அங்கே—அவளைச் சுற்றிலும் மாணவிகள் கூட்டம்!

நான் அந்தக் காட்சியைக் கண்டதும் மீண்டும் ஏதோ ஓர் இனந் தெரியாத உணர்வு எனக்குள் எழுந்தது.

மற்றொருநாள் ஜானகியைத் தேடிக் கொண்டு அவளுடைய அத்தை மகன் வந்திருந்தான், அவன் அழகும் இளமையும் நல்ல குணமும் படைத்தவன். வெயிட்டிங் ஹாலில் புத்தகத்தைப் புரட்டியபடி அமர்ந்திருந்தவன்! பிறகு புத்தகத்தை வைத்துவிட்டு—மாடிப்படியை—ஆவலுடன் அவன் நோக்கிக் கொண்டிருந்தான் அந்த நேரம் பார்த்துதானா நான் மாடியை விட்டுக் கீழே இறங்கி வரவேண்டும்! அவன் முகத்தைக் கண்டதும் எனக்கு வியர்த்தது!

ஏன் அப்படி. வியர்த்ததோ தெரியவில்லை! மெல்ல பெண்கள் பகுதிக்குச் சென்றேன். என் புத்தக அலமாரியைத் திறந்தேன். அதில் போட்டோ எடுக்கும் காமிரா என் கண் முன்பாகத் தோன்றியது! எனக்கு ஒரு கதையின் ஞாபகம் வந்தது. காமிராவைக் கையிலெடுத்துக் கொண்டு யோசனையில் ஆழ்ந்தேன். நான் நின்றிருந்த அறையின் சன்னலுக்கெதிரே ஜானகியும் அவளுடைய அத்தானும் வேப்ப மரத்தடியில் நெருக்கமாக உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

ஏதோ ஒரு இனந்தெரியாத உணர்வில் என் கரங்கள் கேமிராவின் விசையைத் தட்டிவிட்டது. கிளிக்-படம் பிடித்தாகிவிட்டது! என்ன காலடி யோசை?...காலடி யோசை என்னை நெருங்கியது. "என்னடி கோமதி!" ஆம்: ஜானகிதான்-வயதில் சிறியவளானாலும். அப்படித்தான் இருவரும் கூப்பிட்டுக் கொள்வோம். "என்னது காமிராவா? இன்னும் இந்தப் பயித்தியம் உன்னை விட்டுப் போகவில்லையா! எங்கே கொடு பார்ப்போம்-பிலிம் பாக்கி இருக்கிறதா?

உன்னைத் தேடி உன் அத்தான் இங்கேயே வந்து விட்டாரே என்னடி விஷயம்" என்று கேட்டபடி நான் பேச்சைத் திருப்பினேன்.

'ஓ. அத்தானா! அவர் உறவுக்கு அத்தான்! உரிமைக்கு ஒரு அத்தான் அடுத்த மாதமே வருகிறார். அந்த அத்தானுக்குத்தான் நான் கழுத்தை நீட்டவேண்டும். இந்த அத்தான் அவருக்கு சிற்றப்பா பிள்ளை தான். ஏன் கோமதி! இவரையும் ஒரு படம் எடேன். குடும்ப விஷயமாகவே அவர் என்னைக் காண வந்தார்—நீ தப்பாக நினைக்காதே கோமதி" உறவு முறையில் இவர் எனக்கு அத்தானாக இருந்தாலும் என் உள்ளத்தில் அவரை நான் சகோதரனாகவே பார்க்கிறேன் என்றாள்—ஜானகி சே. என்ன ஜானகி இதெல்லாம்! அதற்குள் கல்லூரி மணியடிக்கவே நாங்கள் இருவரும் பிரிந்து அவரவர் அறைக்குச் சென்றோம்!

என் வீட்டில் இருட்டறையில் மெல்லிய விளக்கொளியில் கழுவி எடுத்த நெகடிவை, பிரிண்ட் போட்டுக் கொண்டிருந்தேன்! என்னிடம்.

போட்டோ சம்பந்தப்பட்ட அனைத்துமே உண்டு! நானே 'டெவலப்பிங்' அன்ட் 'ப்ரிட்டிங்' செய்வேன், படம் காய்ந்ததும் எடுத்து வெளிச்சத்தில் கொண்டு வந்து பார்த்தேன்! அது என்ன படமா? அல்லது சினிமா—கதாநாயகியும் நாயகனும் டூயட் பாடும் காட்சியா? படம் ஷேக் ஆகாமல் துல்லியமாக தெளிவாக இருந்தது. பெருமூச்சு என்னையும் அறியாமல் எழுந்தது. அந்த மூச்சுக் காற்றில் கையிலிருந்த படம் படபடத்தது. ஆம்! அவள் வாழ்வும் படபடக்கக் கூடும் என்பதை என் மன அலைகள் அடுத்து அடுத்துக் கூறின.

கோமதி! என்று குரல் கொடுத்துக்கொண்டே ஜானகி என் அறையில் நுழைந்தாள். "என்ன! என் படம் எப்படி! நான் திடுக்கிட்டு அவளுக்குத் தெரியாமல் கையிலிருந்த படத்தை மறைத்து விட்டேன்.

ஆனால் இதையெல்லாம் கவனிக்காத ஜானகி - "கோமதி என் கல்யாண விஷயமாக இன்றே எங்கள் ஊருக்குப் போகிறேன். நான் அடுத்த வாரமே வந்து விடுவே-இதை உன்னிடம் சொல்லிக் கொண்டு செல்லத் தான் வந்தேன். நான் வரட்டுமா" திடீர் புறொகிறும்! அவள் சென்று விட்டாள்! ஆனால் அவள் வாழ்வை என் கையில்தான் விட்டு விட்டுச் சென்றிருக்கிறாள்.

நாட்கள் உருண்டோடின—எனக்குள் ஒரு முடிவுவந்தது அப்பப்பா! நான் அவளுக்கு வரும், வருங்கால கணவனுக்கு எப்படிக் கடிதம் எழுது வது என்று தான் யோசித்தேன் (விலாசம்தான் முன்பே பேச்சு வாக்கில் கேட்டு குறித்துக் கொண்டிருந்தேனே).

கடிதம் ஒன்று எழுத ஆரம்பித்தேன்—"அன்புள்ள அப்பாவிக்கு அனுதாபம் கொண்ட பிறவியின் எதிர்பாராத கடிதம். இத்துடன் உள்ள போட்டோவில் உள்ளவைகளைப் பார்த்திருப்பீர்கள். ஆச்சரியம் வேண்டாம்! "டிரிக்' போட்டோ அல்ல—நெகட்டிவும் அனுப்பி யுள்ளேன். இதை மட்டும் தயவு செய்து போட்டோ விபரம் தெரிந்த நபரிடம் கொடுத்து "டிரிக்" போட்டோவா "ரியல்" போட்டோவா (உண்மைப் படமா) என்பதை சோதித்துப் பார்க்கவும். நானும் உங்களைப் போன்ற நிலையில் இருந்துதான் எழுதுகிறேன். என்னையும் இப்படித்தான் ஒரு முறை கொல்லாமல் கொன்றுவிட்டாள் ஜானகி. அவளால் வஞ்சிக்கப் பட்ட உள்ளங்களின் பட்டியலிலே என்னுடையதும் ஒன்று! அதுதான் போகட்டும்! உங்களுக்கும் உடன்பிறந்தே கொல்லும். வியாதியாக உதித் திருக்கிறானே உங்கள சிற்றப்பா பிள்ளை—பாஸ்கர். அவனுக்கும் ஜானகி தான் புதிய பாடம் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியை. பாஸ்கரனும் உங்கள் வாழ்க்கையில் போட்டி இடுகிறான். அவனும் ஜானகியும் சேர்ந்து நடத்துகின்ற நாடகங்களும் ஆடல்களும் பலப்பல. இது அதில் ஒரு காட்சி! புரிகிறதா? பொறுங்கள்! கடிதத்தை கிழித்துவிடாதீர்கள்! நானே எழுத என் கை கூசுகின்றது.

அவர்களிடம் இதுபற்றி ஆராய நீங்கள்புகுந்தால் அவர்கள் நடத்தும் நாடகத்தில் நீங்கள் மேகினி வேடம் எடுத்துக்கொண்டதாக—ஏமாளி யாக்கப்பட்டதாகத்தான் முடியு மென்பதையும் எடுத்துக் கூறி என் கடிதத்தை முடிக்கிறேன்.

இப்படிக்கு வஞ்சிக்கப்பட்ட

அனாதை ஆபத்பாந்தவன்.

எழுதிய கடிதத்தை நானே ஒருமுறை படித்தேன், எனக்காக இப்படிக் கடிதம் எழுதத் திறமை வந்தது ஆச்சரியமே!

'அந்த நேரம் காலம் வரும் பொழுது அவரவர்களுக்குத் தனித் திறமையும் வந்துவிடும் என்று பெரியவர்கள் சொல்வது பொய்யாகவா, போய்விடும்.

காலையில் அந்தக் கடிதத்தை தபாலில் சேர்த்துவிடுவது என்று நான் நிம்மதியாக சுழன்று இரவு உறங்கிக் கொண்டிருந்தேன்—நள்ளிரவில் கண் விழித்தேன்! கடிதத்தை போட்டோ படத்துடன் வைத்து மூடினேன, மடித்தேன், அதற்கான பிரத்தியோகமாக தயாரித்த உறையில் இட்டு ஒட்டினேன். தபால தலையும் போதுமானது ஒட்டப்பட்டது. விலாசமும் குறிக்கப்பட்டது.

டக், டக்...என்ன? என் மனமா அடித்துக் கொள்கிறது. செய்து விட்ட பாபச் செயலுக்காக இதயம் துடிக்கிறதா? மீண்டும் மெதுவாக டக், டக், ஒளி. இல்லை! கதவுதான் தட்டப்படுகிறது. யாரது என்று கேட்டபடி கதவைத் திறக்கச் சென்றேன்.

நான் திடுக்கிட்டேன்! "என்ன ஜானகி, எப்பொழுது வந்தாய்? ஏன் இந்த நேரத்தில் என் அறைக்கு வந்தாய்? என்று கேட்டு விட்டுத் திருபபிப் பார்த்தேன். காலண்டரில் ஒருவாரத் தேதி ஓடி விட்டிருந்தது. அவள் பேசினுள்—'கோமதி' நீதான் என சகோதரி, தோழி, அனைத்தும்-உன்னிடமன்றி வேறு யாரிடம் இக் கொடுமையைச் சொல்வேன்,"

என் கண்கள் கடிதத்தை துளாவியது மேஜை விளிப்பிள்

அரை மணி நேரத்திற்கு முன்புதான் வந்தேன். முதலில் உன்னைப் பார்க்கத்தான் இருந்தேன் ஆனுல் குளித்துவிட்டு, அடர்வு தீர ஒரு தூக்கம் போட்டு வரலாம் என்று எண்ணித்தான் - குளியலரைக்குச் சென்றுவிட்டு என் அறைக்கு வந்தேன். அங்கே-நிறுத்திஞள்.

என்ன ஜானகி!—

அத்தான் பாஸ்கர் அலங்கோலமாக இருந்தார். நான் வந்ததும் விளக்கையேற்றிவிட்டு பார்த்தேன். கண்கள செருக, வாய்குலர எழுந்து வந்தார்.

ஏன் அப்படி! உடல்நிலை கோளாரா. உனக்கு அவர் வந்ததே தெரியவில்லையா?

எனக்கும் தெரியாது- அறைக் கதவை திறந்து வைத்துவிட்டுத் தான் குளியலறைக்குச் சென்றேன். அந்த இடை நேரத்தில்தான் அவர் என அறைக்குள பிரவேசித்திருக்கிருர்.

பிறகு! (எனக்கும் என்ன ஆயிற்றென்றே ஆவல்)

எனக்கு கைகள்ஓடவில்லை. அவர் இருந்தநிலை பயங்கரமாக இருந்தது. சட்டென்று என் கையைப்பற்றி விட்டார். சே!...நானும் குளிய லுடையில் தானே இருந்தேன். அதுவும் நழுவியது! ஒருவாறு சமாளிப்ப தற்குள் வழுக்கி விழுந்துவிட்டேன் இதற்குள் விளக்கும் அணைந்து விட்டது என் கைபட்டு! எனக்கு—ஒன்றும் பேச எழவில்லை!

பட்டென்று அவரை ஒருபுறம் தள்ளிவிட்டு எழுந்து விளக்கைப் போட்டேன்! அவர் எழவே இலலை-மயங்கிக் கிடந்தார். அவர் கையில் கற்றைக் கடிதங்கள். அத்தனையும் எனக்காக எழுதியவை. இதுநான் வரை எனக்கு அனுப்பவுமில்லை, அவர் மனதிலுள்ளதைக் கூறவுமில்லை!

அவர் கடிதங்கள் பல, பலமுறை எழுதி எழுதி வைத்து, சேர்த்து வைத்த சேமிப்பாக்கப்பட்டது!...

நான்—இப்பொழுதுதான் பார்த்தேன். அவள் குளித்து வந்த தலையை சுற்றிய துண்டுடன் நின்றிருந்தாள். இன்னும் அவள் படபடப்பு நிற்கவில்லை.

பிறகு, என்றேன்!

ஒன்றுமில்லை! கோமதி! இப்படியும் ஒருதலைப் பச்ச அன்புள்ள காதலும் உண்டா? அவர் "சயனட்" என்னும் விஷப் பொடியை, உண்டு விட்டார். அதுதான் அவர் குடித்தவர் நிலையில் காணப்பட்டதன் காட்சி!

இப்போது தான் யோசித்தேன் மூன்றும் மாடியின் மேல் அறையில் ஏதோ ஒரு சப்தம். அதைக்கூடக் கவனிக்காது கடிதம் எழுதுவதில் இருந்திருக்கிறேன்.

ஏன் கோமதி இது உலகத்தில் உண்டா? மனதில் ஒன்றை இதுவரை பூட்டி வைத்துக் கொண்டு இருந்துவிட்டு நான் ஒருவருக்கு சொந்தமாகி விடுவேன் என்றதும், மனதை திறந்து காட்டியதோடு உயிரைக் கொடுத்து நிற்பது. கூறிவிட்டு—அவள் அழுதாள். தேம்பினாள். நான் தேற்றினேன்.

ஜானகி...ஏன் அழுகிறாய்!

அக்கா! திருமணமும் நின்றுவிடும்! அந்த பாஸ்கரனின் உயிரும் என்னைத் தொடர்ந்து வரும்.

ஆம்! அவளுடைய மூத்த சகோதரிதான் நான். எனக்கு மூன்று வயது இளையவள் அவள். நான் திருமணமாகி வாழாது கணவனைப் பிரிந்து தனித்து வாழ்கிறேன். அவள் பூச்சிட்டாகப் பறந்து திரிகிறாளே, நாம் இப்படி வாழாது வாழும்போது என்ற குறைதான் முன்பு எனக்கு அவள்மீது காணாத பொறாமையும் வெறுப்பையும் கொடுத்தது—" ஜானகி பேசினாள்!— அக்கா...நீதானேக்கா—எனக்கு சகலமும். நாம் என்னதான் தோழிகள் போலப் பழகினாலும்—ரத்தப் பாசம் போகுமா—அக்கா—உன் வாழ்வும் ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டது. என் வாழ்வு அதைவிட எதிர்பாராதது பாதிக்கப்பட்டுவிட்டது! சரித்திர காலத்தில்கூட இல்லாத தக்கா இது. பாஸ்கர் அத்தானின் ஒரு தலைக்காதல்-எப்படி அக்கா-இதை பொறுப்பேன்' என் மார்போடு சாய்ந்து கொண்டு கண்ணீர் உகுத்தாள். அந்தக் கண்ணீர் என் இரும்பு இதயத்தை மெள்ள மெள்ள அரித்தது. ஆம் நானும் செய்யவிருந்த பாபச் செயலை எண்ணி கண்ணீர் உகுத்தேன். அது அவளுக்குத் தெரியாது. அந்தப் பிஞ்சு உள்ளம் அழுதபடியே உறங்கி விட்டது! அதைப் படுக்க வைத்துவிட்டு, எழுந்தேன்! மேஜை விளிம்பிலிருந்து "அந்தத் துரோகக் கடிதம் சிரித்தது." மெல்ல எடுத்தேன்.

என் மனம் உறுத்தியது. எத்தனைப் பச்சைபிள்ளையாக அவள் நம்மிடம் பாச உணர்வு கொண்டு இருக்கிறாள், நாம் எத்தனை கொடிய கொடுமை புரிய இருந்தோம். துன்பம் கண்டதும் நம்மைத் தானே துணை தேடி வந்தாள் ஜானகி. நானோ! தீமையைத்தானே பாசத்தின் பரிசாகத்தந்தேன். இது— அவள் வாழ்க்கையை சூறையாட இருந்த எனக்கே பிரியாத புதிர். யாரிடம் விளக்கம் கேட்பது?



# மறைந்தார்

நமது மாகாண மகாஜன சங்கத்தின் பொதுக்குழு (மாகாண கமிட்டி) அங்கத்தினரும், வட ஆற்காடு ஜில்லா பச்சூர் கிராம மிராசுதாரரும், பொதுநல ஊழியருமான

**திரு. காவேரி திம்மராய செட்டியார்**

அவர்களின் திருவுருவப் படம் இது!

ஜனனம்: *1901.*
மறைவு: *18-2-64.*

# தியாகி திருப்பதிசாமி நினைவு நாள் விழா விமரிசையாக திருச்சியில் நடைபெற்றது

22—3—64 ஞாயிற்றுக்கிழமை காலை 10-மணி அளவில். திருச்சி குஜிலித் தெருவு 61 எண்ணுள்ள மோதி சம்பூர்ணம் அம்மாள் திருமண மாளிகை கட்டிடத்தில் நம் குல பிரமுகர், தியாகி திரு K. V. திருப்பதிசாமி அவர்களின் நினைவு நாள் விழா மிகவும் விமரிசையாக நடைபெற்றது.



தியாகி திருப்பதிசாமி

நிகழ்ச்சிகளில் நகர மக்களும் நம் சமூக மக்களும், அரசியல்-தொழிற் சங்கத் தலைவர்களும் வியாபாரிகளும் பெருவாரியாகக் கலந்து கொண்டு சிறப்பித்துவைத்தனர்.

தமிழ்நாடு காங்கிரஸ் சமிட்டி உபதலைவரும், சென்னை அரசாங்க மேல்சபை உறுப்பினருமான தியாகி திரு T. S. அருணாசலம் அவர்கள் தலைமை வகித்தார்கள்.

சென்னை நகராண்மைக் கழக காங்கிரஸ் கட்சி அமைப்பாளர் திரு S. G. விநாயகமூர்த்தி M. A., M. C. அவர்கள் தியாகி திரு K. V. திருப்பதிசாமி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்.

திருச்சி ஜில்லா காங்கிரஸ் கமிட்டி உபதலைவர் திரு M. பழனியாண்டி அவர்களும், திருச்சி ஜில்லா செயற்கை வைர தொழிற் சங்கத் தலைவர் திரு G. S. ஞானம் அவர்களும். மற்றும் பல நகர பிரமுகர்களும் தியாகி திரு K. V. திருப்பதிசாமி அவர்களின் தொண்டு, குணாதிசயங்கள் பற்றி சொற்பொழிவாற்றினார்கள்.

அதுபோழ்து, நம் மாகாண மகா ஜன சங்கத் தலைவர் தேசம். திரு R. சென்னி செட்டியார் அவர்களும், தியாகி திரு K. V. திருப்பதிசாமி அவர்கள் சமூகத்திற்கும் பொதுவாக நாட்டு மக்களுக்கும் செய்துள்ள சேவைகள் குறித்து சிறப்புரையாற்றினர்.

அன்று காலை 8-30 மணி அளவில் திருச்சி மேலராணித் தெருவில் உள்ள தியாகி திரு K. V. திரும்பதிசாமி அவர்களின் வீட்டிலிருந்து அவரது உருவப் படத்துடன் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது,

விழாவிற்கு வருகை தந்திருந்தவர்களுக்கும் ஆயிரக்கணக்கான ஏழை மக்களுக்கும் பகல் உணவு வழங்கப்பட்டது.

விழா ஏற்பாடுகளை தியாகி திரு K. V. திருப்பதிசாமி அவர்களின் தந்தையார் திரு K. வெங்கிட்டராமன் செட்டியார் அவர்களும், அரசன் செட்டிபட்டி பஞ்சாயத்து உறுப்பினரும், மகாராஜா செயற்கை வைரம் வெட்டும் தொழிற்சாலை அதிபருமான திரு V. பழனிச்சாமி செட்டியார் அவர்களும் முன் இருந்து கவனித்து நடத்தி வைத்தனர். (பி. வி. எம்.)

# வாலிபர்களுக்கு!

**P. V. M.**

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்ச மென்பதில்லையே"—என ஆர்ப்பரிக்கும் நெஞ்சுரம் வாய்ந்த அஞ்சா நெஞ்சினர் வாலிபர்கள்!

இடியென முழக்கமிட்டு, புலியென சீறிப் பாய்ந்து, பகைவரை வெல்வதற்குரிய போர்க் குணம் நிரம்பியுள்ள இளம் காளைகள் வாலிபர்கள்!

அநீதி என்றதும் எதிர்த்துப் போராடி, அக்கிரமங்களை அடக்கி யொடுக்கி, அவனி எங்கும் அறிவொளி பரப்ப முனையும் ஆற்றல் மிக்கவர்கள் வாலிபர்கள்!

பச்சை ரத்தத்தைப் பரிமாறியேனும் குழப்பமான சூழ்நிலைகளையும் சிக்கலான பிரச்சினைகளையும் சுமுகமாக தீர்த்து வைக்கக் கூடிய சிந்தனைச் சிற்பிகள் வாலிபர்கள்!

ஆம்! வாலிபர்கள் ஒவ்வொரு சமூகத்திலும் விலைமதிக்க முடியாத மாணிக்கங்களாகவே திகழ்கிருர்கள்.

சமூகத்தின் உயிர்நாடிகள் என்றும், முன்னேற்றப் பாதையில் துணிச்சலாக முன்னேறிச் செல்லும் முன்னணி படையினர் என்றும், எந்தத் துறையானுலும் அதிலே தன்னலம் கருதாது ஈடுபட்டு தன்னம்பிக்கையோடு பாடுபடும் பக்குவம் உள்ளவர்கள் வாலிபர்கள் என்றுக் குறிப்பிட்டுச் சொல்லுவதும் மிகைப்படுத்துவதாகாது.

நம் நாட்டைப் பொருத்தவரையில், அரசியல் களத்தில் வாலிபர்களின் தொண்டுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருந்து வருவதை யாரும் மறுக்கமாட்டார்கள். ஆனல், சமுதாயம் சாக்கடையாகவே இருக்கும்போது நாடு எப்படி பூங்காவனமாகத் திகழ முடியும்? என்ற கேள்வியை எழுப்புவது எந்த வகையிலும் குற்றமாகாது.

இன்றைய நிலையிலே வாலிபர்களின் சலியாத உழைப்பும் சேவையும் மிக மிக இன்றியமையாததாகத் தேவைப்படுவது அரசியல் போர்களத்திற்கல்ல—சமூக உலைக்களத்திற்கு என்பதை காலச் சக்கரம் வெளிப்படையாகவே சுட்டிக் காட்டிக் கொண்டு ஓடுகிறது.

சமூக அமைப்பில் வாலிபர்கள் செய்யவேண்டிய வேலைகள் அதிகம் இருக்கின்றன. அந்த வேலைகளை எல்லாம் முறையாக—ஒழுங்காக செய்து முடிக்கும், தகுதி வாய்ந்த—திறமை நிறைந்த—சேவை செய்வதில் நம்பிக்கையுள்ள நல்ல வாலிபர்கள் அதிகம் பேர் தேவை. நாட்டு மக்கள் குறிப்பாக ஒவ்வொரு சமூகத்திலும் உள்ள வாலிபர்கள், இந்த உண்மை நிலையைப் புரிந்துக் கொண்டு ஆக்க வேலைகளில் ஊக்கத்துடன் ஈடுபடுதல் வேண்டும்.

நாலாறுமனே தெலுங்கர் குல வாலிபர்கள் அத்தனைப் பேரும் ஒரே அரசியல் நோக்கு உள்ளவர்களோ, ஒரே அரசியல் கட்சியை சார்ந்தவர்களோ அல்ல. பல்வேறு கொள்கைகளைப் பின்பற்றி வருபவர்கள் வெவ்வேறு கட்சிகளில் இருந்துகொண்டு வந்தாலும் எல்லா கொள்கை—கட்சிகளுக்குள்ளும் ஒன்றுபட்ட கருத்துக்கள் சில இருக்கின்றன. அந்த அடிப்படையிலே நின்றுவது சமூகத்தில் காணப்படும் சீர்கேடுகளை—ஊழல்களைப் போக்குவதில் எல்லோரும் ஒன்றுபட முடியும்; ஒன்றுபடலாம்; ஒன்றுபட்டால்தான் நமக்கு உண்டு வாழ்வு!

நாம் கல்வியின் அவசியத்தைப் பற்றி நீண்ட நெடுங்காலமாகவே பேசிக்கொண்டும் எழுதிக்கொண்டும் வருகிறோம். பேச்சும் எழுத்தும் நம் பிற்போக்கு நிலையை மாற்றியமைத்துவிட வில்லையே!... ஏன்?... சிந்தித்துப்பாருங்கள்!

வாலிபர்கள் ஒன்றுபட்டு, ஒரே குறிக்கோளோடு, ஏன் கல்வியைப் பரப்புவதில் கவனம் செலுத்தக் கூடாது? முயன்றால் முடியாதா? முயற்சி நல்ல பலனைத் தராதா?—இதையும் எண்ணிப் பார்க்கவேண்டும்?

நாலாறுமனைத் தெலுங்கர் குலம் கல்வியறிவின்றி நலிந்திருக்கிறதென்றால் பெற்றோர்களின் கல்வியின்மையே பிற்கால சந்ததியினரை வானா வெட்டிகளாக ஆக்க வழிவகுத்திருக்கிறதுஎன்பதுதான் வெளிப்படையான அர்த்தமாகும்—இந்நிலை மாற வேண்டும். மாற்றம் காண வாலிபர்கள்தான் உணர்ச்சியுடன் கிளர்ந்தெழுந்து ஊக்கத்துடன் பாடுபட வேண்டும்.

அனாதைகளுக்கு ஆதரவு—உணவுக்கும் உடைக்கும் வழி—தங்கும் விடுதிகள்—உபகார சம்பளங்கள்—கல்வி, தொழிற் நிலையங்கள் நம் சமூக ஏழை சிறுவர் சிறுமிகளுக்காகவே ஊர்கள் தோறும் ஏற்பட வேண்டும். அதே சமயத்தில் வள்ளல் அழகர்சாமிகள் இன்னும் பலர் நம் சமூகத்தில் தோன்றுவதற்கும் நாம்தான் காரணமாய் இருக்கவேண்டும். அரசியலாரின் ஆதரவையும் உதவியையும் பெறுவதற்கும் ஆவனவற்றை செய்ய வேண்டும்.

காசைப் பாசி பிடிக்க வைத்துக்கொண்டு கல்லரைப் புகும்போது காலணாவையும் உடன் எடுத்துச் செல்ல முடியாது என்ற நிலையை உணராமல் இருக்கும் கனதனவான்கள் கண்கள் இருந்தும் குருடராக இருக்கக் கூடாது. அவர்களுடைய கல் நெஞ்சம் கரைந்து, லோபி மனப்பான்மை அகன்று சமத்துவ நேர்க்கோடு சமூக கல்வி வளர்ச்சிக்கு பெருமளவில் பயன்பட வேண்டும் என்பதும் நமது வேண்டுகோளாகும்.

இப்படிப்பட்ட புதிய திருப்பங்களெல்லாம் நம் சமுகத்தில் ஏற்பட வாலிபர்கள்தான் முன் நின்று முயற்சி செய்யவேண்டும்.

வாலிபர்கள்தான் அடிமைபுத்தி—அறியாமை எண்ணங்களைத் தவிடு பொடியாக்க இயலும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

வருங்கால சமுதாய அமைப்பில் சாதி அல்லது சமூகப் பிரிவுகள் இருக்காது என்பது நமக்குத் தெரியும். ஆனால், இன்றைய நிலையில் சமுதாய அமைப்பு ஒரு கட்டுப்பாட்டுக்குள் இல்லாமல் சிதறிக்கிடக்கிறதே,—இதைக் கொஞ்சம் கொஞ்சமாகத்தானே செம்மைப்படுத்திச் செல்லவேண்டும்.

மேல் வகுப்பு—கீழ் வகுப்பு என்ற பாகுபாடுகள், உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற வேற்றுமைகள் இன்றைய சமுதாய அமைப்பில்

நிலைத்து நின்று நர்த்தனம் புரிகின்றன. அவை ஒழிய வேண்டும்—ஒழிக்கப்படவேண்டும்.

தாழ்ந்தவனை சமநிலைக்கு வருமாறு தட்டி எழுப்ப வேண்டும். மற்றவனோடு அவனை ஒத்த நிலைக்கு உயர்த்த வேண்டும். அவ்வாறு உயர்த்தப்படவேண்டிய வரிசையில்தான் இன்று நாலாறுமனைத் தெலுங்கர் குலம் இருக்கிறது.

பழம் பெருமையும் பெயர் மாற்றங்களும் நம் நிலைமைகளை மாற்றியமைத்துவிடவில்லை. அப்படி முடியவும் முடியாது. ஆனால், பழமை மோகம் அகன்ற புதுமை விரும்பிகளான நம் குல வாலிபர்களின் கருத்தொருமித்த புரட்சி நோக்கு நிச்சயம் ஒரு புதுப் பாதையை நமக்கு தோற்றுவித்துக் கொடுக்கும் என்பதில் மட்டும் ஐயப்பாட்டுக்கு இடமே இல்லை என்றும் துணிந்துக் கூறலாம்.

கடைசியாகவும் ஒன்றை வெளிப்படையாகவே இத்தருணத்திலேயே தெளிவுபடுத்திவிட விரும்புகிறோம்—"பேச்சும் எழுத்தும் சமூகத்தைப் பற்றியதாகவே இருந்துவரும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில், நம் சமூகம் நாட்டுக்கும் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் சேவைசெய்ய வேண்டாமா?" என்ற கேள்வி எழுவதும் இயற்கையேயாகும்.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நாமும் சேவை செய்ய கடமைப்பட்டவர்கள்தான். இந்நாட்டில் பிறந்து வளர்ந்து, இந்நாட்டு இன்பங்களை நுகர்ந்துக் கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆண்—பெண்—வாலிபர் அத்தனைப்பேரும் அக்கடமைக்கு உட்பட்டவர்களேஎன்பதும் பொய்யல்ல.

எனவே, சமூக மக்களின்—குறிப்பாக வாலிபர்களின் ஒன்றுபட்ட தொண்டின் பயனாக பலப்படுத்தப்பட்டு முற்போக்கடைந்து நிற்கும் 24—மனை தெலுங்கு செட்டியார் சமூகம் அரசியல் களத்தில் ஓர் உன்னத இடம் பெற்று, நாட்டு சேவையில் தீவிரமாக நாட்டங் கொண்டு உழைக்கும் என்பதை சமூக மக்கள் சார்பிலேயே உறுதிபடுத்துகின்றோம்.

## சில குறிப்புகள்

பால் பாத்திரத்தோடு கொதிக்கும் பொழுது அது பொங்கி வழியாமலிருக்க ஒரு கண்ணாடி கோலியை அதனுள் போடலாம்.

முகம் பார்க்கும் கண்ணாடியில் அடிக்கடி அழுக்கு படியுமானால், அதை நீக்க ஒரு 'கார்க்' அடைப்பானால் தேய்த்தால் அழுக்கு சுலபமாக அகலும்.

துணிகளில் 'மை' கறை படிந்தால் கொஞ்சம் சுண்ணாம்பை 'மை' பட்ட இடத்தில் தடவி சிறிது நேரத்திற்குப் பின் துணியை நீரில் கசக்கிப் பிழிந்தால் 'மை' பட்ட கறை விட்டு விடும்.

—பி. வி. எம்.

# அன்புள்ள தம்பிக்கு

திரு S. G. ஜோதிநாராயணன், B. A., D. P. P. A.

அன்புள்ள தம்பி,

உனது கடிதம் கண்டு மிக்க மகிழ்ச்சியுற்றேன். பொங்கல் விழாவினை, நீயும் கிராமத்திலுள்ள மக்களும் சிறப்பாகக் கொண்டாடினீர்கள் என்று எழுதியுள்ளாய். ஆண்டு முழுமையும் ஆற்றிய உழைப்புக்குத் தக்க அறுவடைப் பரிசு பெறும்போது, மனம் மகிழ்ந்து கொண்டாடுவதும், பரிசு பெற உறுதுணையாக விளங்கிய தியாகச் சின்னங்களுக்கு நன்றி கூறுவதும் மனித இயல்பாகும். எனினும், நான் உனக்கு ஒன்று கூறுவேன் ;

நமது இன மக்களுக்கு ஆண்டுதோறும் எத்தனை விழாக்கள்! அவற்றால் நேரும் செலவினங்கள் எவ்வளவு!! இவற்றை அளவிட்டுப் பார்க்கும்போது இத்தனை விழாக்களும் நமக்கு இன்றியமையாத தேவைகள் தானா என்று நினைக்கத் தோன்றுகிறது! தைப் பொங்கல், தீபாவளி, விநாயகர் சதுர்த்தி, ஏகாதசி, கிருஷ்ண ஜயந்தி, ஆவணி அவிட்டம், சரஸ்வதி பூஜை, கார்த்திகை, பாளய அமாவாசை, வருஷப் பிறப்பு என்று நமக்கு எத்தனை பண்டிகைகள்! நம்மில் வசதியுள்ளவர்கள் இவ்விழாக்களை விருந்துடன் நன்றாகக் கொண்டாடுவதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், இவர்கள் ஆடம்பரமாகக் கொண்டாடுவதைக் காணும் ஏழைகளும், கடன் வாங்கியுங்கூட இப் பண்டிகைகளைக் கொண்டாடுவது நியாயமில்லை என்று நான் கூறுவேன். கிறித்துவர்களும், முஸ்லீம்களும் தங்கள் சமயங்களுக்குரிய பல விழாக்கள் இருப்பினும், அவர்கள் சில முக்கிய விழாக்களையே (கிறிஸ்துமஸ், ஈஸ்டர், ரம்ஜான், மொகரம்) கொண்டாடுகின்றனர். இதனால் அவர்களுக்குப் பணம் மிச்சமாகிறது.

இதனைப் போலவே, நமது மக்கள் திருமணம் போன்ற இதர விழாக்களையும் பிறர் புகழவேண்டும் என்ற போலிப் பெருமைக்காக பகட்டுடன் கொண்டாடி, பின்னர் நஷ்டமடைவது நல்லதன்று. மிகவும் பணவசதி பெற்றவர்களும் இக்காலத்தில் சிக்கனமாகத் திருமணங்களைக் கொண்டாடுவதை நாம் கண்டு வருகிறோம். இதுபற்றி பெரியார் கூறும் கருத்தினை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

"பக்கத்து கிராமத்துக்கு ஒரு அலுவல் காரணமாகச் சென்றபோது, அங்கு உனது நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றதாகவும், தலைக்கு மேலே பெரிய வேலை இருப்பதாக பாவனை செய்துகொண்டு, அன்பின்றி அவர் பேசினார்'' என்றும் எழுதியுள்ளாய்.

உனது அனுபவம் எனக்கு வியப்பை ஊட்டவில்லை. அது இக்கால போலி நாகரிகத்தின் விளைவேயாகும். முன்பு, ஒருவர் நமது சொந்த ஊரி விருந்து வந்துவிட்டால், கலந்த இதயத்துடன் அழைத்துவந்து, பேசி, உணவு படைப்பது வீட்டுக்கு வீடு காணப்பட்ட நிகழ்ச்சியாகும். இக்காலத்தில், பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதலும் நீங்கி, பற்றும் அவசியமும் நேரும்போது மட்டும், நட்பும் உறவும் ஒரு சாக்காக அமைகிறது.

குணத்தையும் குலத்தையும் விடப் பணமே இன்று மக்களை ஆட்டுவிக்கும் பரந்தாமனாக விளங்குகிறது.

"பொறுமையின் எல்லை எது?" என்று எனக்கு ஒரு சிக்கலான கேள்வியை விடுத்துள்ளாய். இதற்கு வள்ளுவர் என்ன பதில் கூறுவார் என்று கேட்போம். "தன்னைத் தோண்டித் துன்பம் செய்பவரையும் தாங்கிக் கொண்டு, பொறுமையுடன் இருக்கும் நிலத்தைப்போல, இருக்கவேண்டும்" என்று அவர் கூறுகிறார். "உனது கன்னத்தில் அறைந்தவனுக்கு, மறு கன்னத்தையும் காட்டு" என்று கூறுகிறார் ஏசுநாதர்.

இவை இரண்டும் பொறுமையின் எல்லையை விளக்கும் எடுத்துக் காட்டுகளாகும். தனது மனைவியை, தன் உடன்பிறவாத சகோதரர்களே துகிலுரியும் நேரத்தில், பொங்கி எழுந்து, அவர்களை நிர்மூலமாக்காமல், சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு, மாபெரும் வீரர்களான ஐவர் பொறுமையைக் காத்து நின்றனரே!—இதைவிட பொறுமையின் எல்லையைத் தொடும் சம்பவம் ஒருவர் வாழ்வில் நேரமுடியாது என்று கூறலாம். இன்றுகூட அந்த கோர சம்பவத்தைப் "பாஞ்சாலி சபதத்தில்" படிக்கும் போது நெஞ்சம் துடிக்கிறது. ச்சே, எத்தனை கேவலமான மனிதர்கள்! புழுக்களைவிட மாசு படிந்தவர்கள் !!

"இத்தனைப் பொறுமையை இக்காலத்தில் மக்கள் கடைப்பிடிக்க இயலுமா? கடைப்பிடித்தல் வேண்டும் என்று கூறுதல் நீதியாகுமா? அப்படியே முடிந்தாலும், நமது மான, வீர உணர்ச்சிகள் மண்ணுப் போகாதோ! நம்மை மக்கள் கோழை என்று ஏசாரோ?" என்றும் நீ என்னைக் கேட்கலாம்.

என்னைப் பொறுத்தமட்டில், பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு என்றே கூறுவேன். ஒருவன் வேண்டுமென்றே, சொந்த விருப்பு வெறுப்பின் காரணமாக கெடுதல் செய்கிறார் என்று தெளிவாக விளங்கும்போது, அவரது உறவை வெட்டிக்கொண்டு, கண்டும் உணராதது போல அமைதியாக இருப்பது நல்லது. அவர் இன்னும் மேலே சென்று, நேருக்கு நேர், உன்னை வலிய சண்டைக்கு அழைக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். அந்த நேரத்தில், நீ பின்வாங்குவது அதர்மமாகும். அவர் உனது ஒரு கன்னத்தில் அடித்தால், நீ அவர் இரு கன்னத்திலும், மார்பிலும், பல கொடுப்பதே நன்று; இதுவே சட்டப்படி நியாயமுங்கூட! அப்போது தான், அவர் உன்னைப்பற்றி நினைக்கவும் அஞ்சுவார். "வில்லினை எடடா, அந்த புல்லியர் கூட்டத்தைப் பூழ்தி செய்திடடா" என்று பாரதியார் வெகு அழகாகக் கூறுவது, இவர்களைப்பற்றித்தான்.

"நமது மக்கள் முன்னேற வேண்டும்" என்று நம் இதழ்களிலும் மேடைகளிலும் முழங்குகின்றனர். ஆனால் பெரும்பாலோர் முன்னேறியதாகக் காணவில்லை என்று நீ வருந்துகிறாய்.

நீ கூறுவது உண்மைதான். முன்னேற்றம் என்பது எளிதில் கண்ணால் காணக்கூடிய பொருளன்று. எந்த ஒரு சீரிய செயலையும் விரைவில் சில நாட்களில் செய்து முடிக்க முடியாது. "Rome was not built in a day" என்று கூறுவதை நீ கேட்டிருப்பாய்.

ஒரு காரியத்தில் ஈடுபட்டுள்ளபோது, பல வருஷ உழைப்புக்குப் பின்னும் சிறிதளவு கூட முன்னேற்றம் கிடைக்காமலிருக்கலாம். அதற்கு மாறாக, பின்னுக்குச் சென்றிருப்பது கூடப் புலனாகலாம். எனவே

நாம் உண்மையிலேயே முன்னேறிச் செல்கிறோமா, இல்லையா என்பது நமது மனச் சாட்சிக்கே நன்கு விளங்கும். முன்னேற்றத்துக்காக ஒருவர் மேற்கொள்ளும் பணியை, பனி மலைமீது ஏறும் போராட்டத்துக்கு ஒப்பாகக் கூறலாம்.

நெப்போலியன் உலகில் சிறந்த மாவீரர்களில் ஒருவன். "நேற்றுவரை 'போனபார்ட்டி' ஒரு சாதாரண போர்வீரன்; இன்று பிரான்ஸ் தேசத்தின் மன்னுதி மன்னன்' என்று அவன் வரலாற்றிலே காணவில்லை நெப்போலியன் படிப்படியாகத்தான் முன்னேறியுள்ளான். சிறுவயது முதற்கொண்டு தான் பெரும் படைத் தலைவனாக பல போர்களை நடத்தவேண்டும், பல நாடுகளை வென்று குவிக்கவேண்டும் என்ற எண்ணம் அவன் உதிரத்தில் ஊறி நின்றது. அந்த இலட்சியத்திற்காக அவன் தன்னை இளமையிலிருந்தே போர்வாழ்க்கை முறைகளுக்கேற்ப பண்படுத்திக்கொண்டான். சிறிது முரட்டு ரொட்டியினையே உண்டான்; கடுங் குளிரில் வெட்ட வெளியில் உறங்கினான்.

எனது நண்பர் ஒருவர், எப்போதும் "நான் முன்னேற முடியவில்லையே! எனக்கு அவன் தடையாக இருக்கிறான், இவர் முட்டுக்கட்டை போடுகிறார்" என்று கூறுவார். இதைக் கேட்டு எனக்குச் சிரிப்பு வரும்.

ஒருவர் வளத்துக்கு மாறாக மற்றவர் தடைசெய்து அதனை நிறுத்தி விட முடியும் என்று கூறுவது சரியாகாது. நமக்கு உண்மையிலேயே, பகையாகவும், தடையாகவும் இருப்பவை நாமே—நமது எண்ணங்களும், நாவும்தான்.

இன்று இரவு கண் விழிக்கவேண்டும் என்று நாம் நினைத்தால், நம்மையும் மீறி, கண்கள் சொருகுகின்றன. ஒருவர் இருக்கின்ற செல்வத்துடன் அமைதி பெறாமல், குதிரைப் பந்தயத்தில் எல்லாவற்றையும் இழக்கிறார். இவரை எந்த பகைவர் முன்னேற விடாமல் தடுத்தார்?

முன்னேற்றத்துக்காக விளங்கும் சில முறைகளை நான் உனக்குக் கூறுவேன்: இவை நான் கண்ட புதுமைகளன்று. சில அரிய நூல்களில் காணப்படும் நீதிகளேயாகும்.

முன்னேற்றம் என்பதையே நினையாமல் உனது கடமையை மட்டும் செய்து வா. முன்னேற்றம் உன்னைத் தேடிவரும்.

பிறரைப்பற்றிக் குறை கூறுவதையே சிலர் ஒரு தொழிலாகப் பெற்றுள்ளனர். நாம் வீட்டுக்குச் செல்லும்போது, நமது உணவு நமக்குக் காத்து நிற்க, இறைவன் நம்மை வசதியுடன் வாழச் செய்ததின் நோக்கம், பிறரைப் பரிகாசம் செய்யவும், குறை கூறவும் அல்ல என்பதை மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டும். நாம் பிறரிடம் எவ்விதம் பழகுகிறோமோ, அவ்விதமே அவர்களும் நமக்கு மரியாதை செய்பவர் என்பதை உணர வேண்டும். பிறரைப் பற்றி நீ பேசும்போது, அவரது விரும்பத்தகாத குணங்களை ஒதுக்கி, அவரது நல்ல பண்புகளைக் கூறுவது உனது நாவிற்குச் சிறந்த பயிற்சியாகும். ஏனெனில், நல்லோரிடத்தும் குற்றமும் குணமும் கலந்தே காணப்படுகிறது. சிறையிலே வாடும் கொடிய குற்றவாளிகளிடமும் கூட, படித்தவர்களிடமும் பழுத்த அநுபவம் வாய்ந்தவர்களிடமும் இல்லாத சில உயர்ந்த பண்புகளைக் காண நேரலாம்.

உன்னால் முடிந்தவரை பிறருக்கு உபகாரம் செய்துக்கொண்டிரு. நீ செய்யும் உதவி பெரியதென்றோ, சிறியதென்றோ நினையாதே. ஒரு

குருட்டுப் பிச்சைக்காரனுக்கு ஒரு காசு கொடுப்பதும், ஒரு ஆதரவற்ற பிள்ளைக்கு ஒரு வேளைச் சோறு போடுவதும், எழுதத் தெரியாத ஒருவருக்காக ஒரு கடிதம் எழுதித் தருவதும் உண்மையிலேயே, மிகச் சிறந்த தொண்டுகளாகும்.

கிறித்துவரின் பைபிலில் ஒரு கதை வருகிறது. ஒரு தனவந்தர் ஏராளமான பொருளை பலர் எதிரில், கோவில் உண்டியில் போடுகிறார். ஒரு ஏழைக் கிழவி தனது மொத்த ஆஸ்தியான ஒரே காசை எவரும் அறியாமல், உண்டியில் போடுகிறாள். அதில், ஏழைக் கிழவியின் தர்மமே சிறந்ததென்று ஏசுநாதர் கூறுகிறார்.

நீ எல்லோரிடமும் அன்பு செலுத்தவேண்டும். பழகப் பழக பாலும் புளிப்பதுபோல, காலப்போக்கில் நெருங்கிய உறவினர்களும், நண்பர்களும் துன்பம் தருபவர்களாய் மாறுவதை நான் உணர்வேன். மீண்டும் அவர்கள் பழைய நிலை எய்துதல் இயற்கை நியதியாதலால், அவர்களிடத்தும் அன்பு பாராட்டல் உனது கடமையாகும்.

'அன்பு' என்பது ஒரு அற்புதமான உணர்வாகும். தன்னை விட்டுப் பிரிந்து, எல்லையற்ற பொருளையும் அழித்த மகனை மன்னித்து, "அவன் வீடு திரும்பியதே போதும்" என்று ஒரு உத்தம தந்தை மகிழ்ந்தது, அன்பென்னும் பாசத்தால்! அன்பு வயப்பட்ட இறைவனும் வேடனது எச்சிலை உண்டான்! அன்புத் தளையால் வேறுபட்டு, மாண்புடன் விளங்கிய அக்பரது மாபெரும் அரசு, வரலாற்றில் காணாத புதுமையாகும்.

பிறரது அழிவில் நீ பெருவாழ்வு வாழலாம் என்று கனவிலும் நினையாதே. பிறருக்கு எவ்வித தீங்கும் செய்யாமலே, நீ நன்கு வாழ, இவ்வுலகில் போதிய இடமும், சந்தர்ப்பமும் இருப்பதை நீ உணரவேண்டும். தன்னுடன் பிறந்த சகோதரர், மராத்தியர், ராஜபுத்திரர், ஷியாக்கள்—சமாதியின்மீது தனது இன்பப் புரியை நிறுவ எண்ணங்கொண்ட மதவெறியன் ஔரங்கசீப்பினால், மாபெரும் முகலாய அரசு சிதைந்ததை நீ வரலாற்றிலேயே கண்டுபிடிப்பாய்.

மாரி பொய்த்து, வயல்கள் பாலைவனமாய்க் காட்சியளிப்பதைக் கண்டு கண்ணீர் சிந்தும் உழவன், "எனது நிலத்துக்கு மட்டும் மழை பொழிய வேண்டும்" என்று நினைக்கமாட்டான். வான் மழையின்றி வாடும் பயிர்கள் தழைக்க நிறைய மழை பொழியவேண்டும் என்றே வேண்டுவான். அதுபோன்று, "எல்லோரும் வாழவேண்டும்—நாமும் வாழ்வோம், அவர்களும் வாழட்டும்" என்ற பரந்த எண்ணம் நம் மனத்தில் ஊன்றி, முயற்சியில் முனைந்து நிற்கும்போது, நமக்குத் தடையேதுமில்லை—பகையேதுமில்லை என்று உணர்வாய். முன்னேற்றம் என்ற ஊருக்குச் செல்ல இதுவே ராஜபாட்டை என்று நான் கூறாமலே, உனக்கு விளங்கும்.

இந்த அரிய மனப் பயிற்சியினை இன்று முதல் நீ மேற்கொண்டு ஒழுக நான் வேண்டுகிறேன். பின்னர், நீயே அதன் அருமையினை உணர்வாய்.

கோடை ஓய்வு நாட்களின்போது நீயும் தங்கையும் சென்னை வர வேண்டுவேன். பிற உனது அன்பு லிகிதம் கண்டு.

உனது அன்புள்ள அண்ணன், ஜோதி

# பெரிய மனிதர்!

திரு சீ. தி. ராசு, பேட்டைவாய்த்தலை

மின் விசிறி மேலே சுழன்று கொண்டே இருந்தது! கையில் சிகரெட் புகைந்து கொண்டே இருந்தது! வருவோர் போவோர் எண்ணிக்கை குறையவில்லை! தலைவருக்கு இருக்கவேண்டிய தகுதி பூராவும் அவரிடம் இருந்தது.

தான் தலைவர் ஆனது எப்படி என்றுகூட சில சமயங்களில் சிந்திப்பார் அவர்! ஆனால், நீண்ட நேரம் அதைப்பற்றி நினைப்பது கிடையாது. அது கெட்ட சொப்பனம் அவருக்கு!

நாடே அவர் கையில் இருப்பதாக அவர் நினைத்தார்! ஏன்? மக்களும் அப்படித்தான் நினைத்திருந்தார்கள்.

அவர் சொன்னது நடந்தது. நடந்ததெல்லாம் அவர் சொன்னதாக நினைத்தார்கள் மக்கள்.

தேர்தல் காலங்களில் தலைவர் வீடு திருவிழாக் கூடடம். சிலரை அழைத்து போட்டி போடச் சொல்லுவார்—வலிய வருவோரைத் தள்ளுவார்.

அவர் தயவுக்காக காத்துகிடக்கும் நகரம். அவருக்கென்று எதுவுமே கிடையாது என்பதைப் போல இருக்கும் சூழ்நிலை. ஆனால், அவருக்கு எல்லாமே உண்டு!

ஒருவர் வருவார் வேலை கேட்டு. மற்றொருவர் சிபாரிசுக் கடிதம் கேட்பார். அவர் சிலருக்கு கொடுப்பார், பலருக்கு மறுப்பார். அவரால் வேலை கிடைத்தவர்கள் தலைவரின் தயாளத்தன்மையைகண்டு மகிழ்வர்—ஏழைபங்காளன் தொழிலாளர் தோழன் என்பன போன்ற புகழ் மொழிகள் குவியும், கிடைக்காதவர் மனதிற்குள் சபிப்பர். ஏன்? வேறு வேலையும் கிடைக்காமல் போனால் என்ன செய்வது என்ற பயம்!

தலைவருக்குக்கீழ் குட்டித் தலைவர்கள் இருப்பார்கள். தலைவருக்கு மேல் அதிகாரம் அமல் நடக்கும். தொண்டர்கள் வருவார்கள்—போவார்கள்! அவ்வளவுதான்.

தலைவர் புன்னகை பூப்பார்—தொண்டர்கள் பொறுக்குவார்கள்.

தொண்டர்களுக்கு அதுவே பெருமை.

தலைவர் நினைப்பார் பெரிய கழுத்தறுப்பு இது என்று!

ஒருவர் வருவார்—வாழ வழியில்லையே என்பார்.

பார்க்கிறேன் என்பார் தலைவர்.

பார்ப்பதும் பார்க்காததும் கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

தலைவருக்கும் சில நண்பர்கள் உண்டு!

அவர்கள் சில சமயம் கூடுவார்கள்—பொழுதுபோக வெட்டியாக பேசுவார்கள்.

யாரைத் தூக்கலாம் யாரைக் கவிழ்க்கலாம் என்றும், நண்பர்கள் பேச்சு விளையாடும்.

தலைவர் செய்து முடிப்பார்.

தலைமை பீடத்திற்கு பலியான கொழுத்த ஆடுகளும் உண்டு—மெலிந்த ஆடுகளும் உண்டு!

அவரைக் கண்டு சிலர் பயந்தனர்.

சிலர் நகைத்தனர்.

அவர் தலைவராகவே தான் இருந்தார்—இன்னும் இருக்கிறார்.

பலப்பலர் தலைவராக தயாராகவும் இருந்தார்கள்—சுற்றிவந்த குட்டித் தம்பிரான்களுக்கு

அவர்கள் தங்களைத் தலைவருக்கு வாரிசு என்று கூட நினைத்தனர்.

உண்மையான ஊழியர்கள் நெருங்க முடியவில்லை.

நெருங்கியவர்—துரத்தினார்கள்.

போலிகள் புகுந்து விளையாடும். மேல் மட்டத் தலைவர்கள் வருவார்கள்—போவார்கள்.

ஊர்வலம் வரும்—தலைவர்களுக்குப் பக்கத்தில் தலைவர் இருப்பார்.

தனக்குத்தான் கூட்டம் என்று தலைவர் நினைப்பார். தான் சிரமபட்டு கூட்டம் சேர்த்ததாக தலைவர் கூறுவார். எப்படியோ மந்தையை போன்ற கூட்டம் தலைவர்களைச் சுற்றி வந்தது.

சுற்றி வந்த கூட்டத்தால் சுகம் கண்டார்கள் தலைவர்கள்.

இவரால்தான் தனக்கு புகழ் என்று அவர் நினைப்பார். அவரால் தான் புகழ் என்று இவர் நினைப்பார். மக்கள் பலப்பல நினைப்பார்கள் என்றாலும் தலைவர் தலைவராகவே தான் இருந்தார்.

வேலை தேடி வருவோர், வேதனையைக் கூற வருவோர் கல்லூரியில் இடம் கேட்போர், தேர்தலில் சீட்டுக் கேட்போர், பெரிய மனிதராக நினைப்போர், பெரிய மனிதத் தன்மையை இழந்து அந்த பெரிய மனிதரிடம் காத்துக் கிடந்தார்கள்.

இத்தனைக்கு அவர் படித்து பட்டம் பெற்றவர் அல்ல. பெரிய அறிஞர் என்றும் பெருமைபாகக் கூற ஒன்றும் இல்லை. எப்படியோ அவர் பெரிய மனிதராகி விட்டார்.

சிகரெட்டு துண்டுகள் குவிந்து கிடந்தது—எண்ணக் குவியலில் ஆழ்ந்துக் கிடந்தார் தலைவர்.

இப்போது பார்க்க முடியாது: உடல் சரியில்லை. பெரிய மனிதருடன் பேசிக் கொண்டிருக்கிறார். தலைவருக்குத் தலைவலி—இப்படி ஏதாவது கூறி விரட்டிக் கொண்டிருந்தார்கள் குட்டித் தலைவர்கள்.

# சோதிடனும் ஞானியும்

'ஞானிக்கு எதிர்காலத்தில் நிகழப் போவது தெரியுமா?' என்று யாரோ ஒருவன் கேட்டானும், அதற்கு யாங்ஷியூங் என்ற அறிஞர் 'ஆகாயத்தையும் பூமியையும் பற்றிய எதிர்கால உண்மைகளை ஒரு ஞானியால் எடுத்துக்கூற முடியும்' என்றார்.

'அப்படியானால் ஞானிக்கும் சோதிடனுக்கும் உள்ள மாறுபாடு என்ன?' என்று அவன் திருப்பிக் கேட்டானும்.

'சோதிடன் மனிதனைச் சார்ந்து நிற்கும் கிரகங்களின் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளின் பலன்களை முன் கூட்டியே கூறி விடுகிறான்; மனிதனுடைய நடத்தைகளால் கிரகங்களுக்கு ஏற்படக் கூடிய பலன்களை ஞானி முன் கூட்டியே சொல்லி விடுகிறான்' என்றாராம் அறிஞர் யாங்ஷியூங். —"முத்து"

# வாழையடி வாழையாக....!

திரு கி. மா. பக்தவத்சலன்

மணமாவதற்கு முன்னால்—ஒவ்வொரு ஆணும் பெண்ணும் படித்தவைகளையும், பார்த்தவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு மனதால் ஆயிரக்கணக்கான மாளிகைகளைக் கட்டியிருக்கிறார்கள். கற்பனைகளாலும், கனவுகளாலும் கொள்ளை இன்பம் கண்டிருக்கிறார்கள். 'காதல் இலக்கியங்களிலே தலைசிறந்தவை' என்று சொல்லப்பட்டனவற்றை எல்லாம் வாங்கிப் படித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

மணமான பின்னர்—தான் மனதில் நினைத்த இலட்சிய மனைவியோ—கணவனோ கிடைக்கவில்லையே என்று எண்ணுவது பெருந்தவறு.

சிலர்—தான் கதையில் படித்த கட்டழகனைப் போலத் தன் கணவன் இல்லையே என ஏங்குவதும், சினிமாவில் பார்த்த சிங்காரியைப் போலத் தன் மனைவி இல்லையே என்று சினப்படுவதுமாக இருக்கலாம்; இது தவறு.

கதையில் வரும் காதலர்கள் வாழ்க்கைக் காதலர்கள் அல்ல. சினிமாவில் தோன்றும் காட்சிகள் உண்மைக் காட்சிகள் அல்ல. ஆகையால் அந்த மாதிரி வாழ்க்கையைப்பற்றி ஆணோ, பெண்ணோ. நினைத்துப் பார்ப்பதில் ஒரு பயனும் இல்லை. வாழ்க்கையில், 'காதல் இல்லையே' என்று வருந்துவதிலும் (passion) ஒரு பொருளும் இல்லை. 'காதல்' என்பதெல்லாம் கதையளவில்தான் இருக்கிறது. பெரும்பாலாக நடைமுறை வாழ்க்கைக்கும், காதலுக்கும் எவ்வித ஒருமைப்பாடும் இல்லை என்பது உண்மை.

"எல்லோரும் காதல் புரிவதும், காதல் புரிந்த கன்னியரை மணம் செய்து கொள்வதும் சாத்தியமில்லை. ஏனெனில், நம் நாட்டில் இத்தனை வித சாதிகளும் இத்தனை கட்டுப்பாடுகளும், எத்தனையோ தினுசு வழக்கங்களும், சம்பிரதாயங்களும் நிறைந்திருக்கும் போது, "காதல் மணம் தான் வேண்டும்" என்றால் நடக்காது" என்றார் பாரதியார்.

மேனாடுகளில் கண்டதும் காதல் முளைக்கிறது! மறுநாளோ அல்லது மறு வாரமோ மணமும் முடிகிறது!

சிலர், "உனக்கு நான்; எனக்கு நீ" என்று உடனே உணர்ச்சி வேகத்துடன் ஒன்று படுகின்றனர்.

"ஆணும் பெண்ணும் எளிதில் ஒருவரை ஒருவர் அறிந்து கொண்டால் அவர்கள் மிகவும் தரக் குறைவான காதலர்கள். ஒருவருக்கு ஒருவர் எளிதில் நட்பு கொள்ளும் ஆணோ, பெண்ணோ அவர்கள் அன்பு வாழ்நாள் முழுவதும் நீடித்து இருப்பது இல்லை" என்கிறார் ஒரு பெரியார்.

மேனாட்டினரைப் போல—இங்குள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் 'அந்தியிலே, மலர்ச்சோலையிலே—கற்கண்டின் மொழிகூறி, காதல் பாடிப் பழகி, பின்னர் திருமணம் செய்து கொண்டவர்களாக' இருந்தாலும்கூட, ஒருவரது உள்ளப் பண்பை—உண்மை இயல்பை மற்றவரால் தெரிந்து கொள்ள முடிவதில்லை!

ஏனெனில், ஒவ்வொரு ஆணும் பெண்ணும் அப்போது பெற்றிருக்கிற இளமைத் துடிப்பில் இன்னதென அறியா இனக்கவர்ச்சியின் (sex appeal) காரணமாக, அவர்கள் இடத்தில் இருக்கின்ற குற்றங்களைத் தெரிந்துகொள்ளும் வாய்ப்புகள் கிடைத்தபோதும்கூட, குறைகளையும் குணங்களாகக் கொண்டு, கொண்டாடிக் குதூகலித்திருக்கிறார்கள்'

கண்ணையும் கருத்தையும் கவர்ந்திருந்த கிளர்ச்சியின் வேகம் குறையக் கவர்ச்சியற்றதாகிறது அவர்கள் காதல்! கவர்ச்சி எனும் ரசம் பூசப்பட்ட பருவக் கிளர்ச்சி என்னும் கண்ணாடியின் புதுமைப் பொலிவு நாளடைவில் தேயத் தொடங்குகிறது. தேடிப்போய்—நாடிப்பெறும் இன்பம் வாடிப் போகிறது.

அவர்கள் துக்கத்திற்கு ஆளாகிறார்கள்! அதற்குரிய காரணத்தை நாம் ஆராய்வோமானால்—அவர்களுக்குள் கால வேகத்தில் அன்பு குறைந்துவிட்டது என்பதை எளிதில் கண்டு பிடித்து விடலாம்.

நாளுக்கு நாள் அன்பு குறைவதென்றால் அது காதல் அல்ல.

வெறும்—எதிர் இனத்தின் உடலும், அங்க அமைப்பும் கிளறிக் கொடுத்த வெளிக் கவர்ச்சி.

வெளிக் கவர்ச்சிக்குத்தான் அநேகர் ''காதல்'' என்று பெயர் வைத்து விடுகிறார்கள்.

காதல் ஏற்பட்டுவிட்டது என்ற ஒரே காரணத்தை முன் வைத்து, அநேகர் அவசரப்பட்டு திருமணம் செய்து கொள்கிறார்கள்; பின்னால் ஓய்ந்திருக்கும்போது அதற்காகவே வருந்துகிறார்கள்.

திருமணத்திற்கு முந்திய காதல் தொடர்புகளில் நூற்றுக்கு தொண்ணூறு இந்தக் காரணத்தினாலேயே எழில் பெறுமலும் திருமண முடிவை எட்டாமலும் தோல்வி அடைந்திருக்கின்றன.

''கண்டேன்—காதல் கொண்டேன்—மனதைப் பறிகொடுத்தேன்'' என்பதெல்லாம் வெறும் வார்த்தை அலங்காரம். ''காதல் திடீரென்று முளைப்பதல்ல. ஒருவருடன் பழகப் பழகத்தான் அன்பு வளரும். ஒருத்தியை அல்லது ஒருவனை மணந்து ஒருவருடன் ஒருவர் ஒன்றுபட்டு வாழ்க்கை நடத்துவதுதான் காதல். இம்மாதிரிதான் காதலை வளர்க்க முடியும். கண்ணை மூடிக்கொண்டு விழுவது காதல் அல்ல'' என்கிறார் வில்ப் எக்கார்ட்.

யாரோ சொல்லி இருப்பதுபோல, ''குடும்பமும் சமூகமும் என்றுமே கட்டுப்பாடற்ற காதல் உறவுகளுக்கு விரோதிகள்தான். காதலும் அதன் விளைவுகளும் தனி மனித விவகாரம் என்பதை விட, சமூகப்பிரச்னை என்கிற நிலைமைதான் நீடிக்கிறது. காரணம் என்ன? தனி மனிதரின் செய்கை குடும்பத்தைப் பாதித்து—அதன் மூலம் குறிப்பிட்ட இனத்தையும் பாதிக்கிறது. அதனால் அமைதியும் ஒற்றுமையும் சீர்குலைய நேரிடுகிறது. இதன் மூலம் சமுதாயம் முழுவதும் அங்கீகரித்து—நிலை நிறுத்தியுள்ள ஒரு தன்மை வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. தனிமனிதரின் பருவ உணர்வுத் துடிப்புகளுக் கெல்லாம் ஈடு கொடுக்கக்கூடிய—கொடுத்தாக வேண்டிய—ஒரேமார்க்கம் திருமணம்தான் என்று வரையறுத்து இருக்கிறது சமூகம். 'அத்தகைய போக்கு' அமைக்கப்படாவிட்டால் மனித உணர்வுகள் பொங்கிப் பிரவாகித்துக் குடும்ப—இனம்

(sex) இவைகளில் நிலவும் உறவு முறைகளில் கட்டுப்பாடற்ற விளைவுகளை உண்டாக்கி, சமூக ஒழுங்கையும் அமைப்பையும் சீர்குலைந்து நாசமாக்கிவிடும் என்பது நிச்சயம்.''

காதல் மணங்களைக் காட்டிலும் பெரியவர்களும் பெற்றோர்களும் பார்த்து, முடித்துவைக்கும் திருமணங்களே பெருமளவில் நன்மை அளிப்பதாக இருக்கின்றன. மணவாழ்க்கை நல்ல அமைதியோடும் இன்பமாகவும் மகிழ்ச்சிக்குரியதாகவும் இருப்பதற்கு மணமக்களின் குடும்பம், ஒழுக்கம் முதலியன முக்கிய காரணங்களாகும். இவற்றைக் கண்டறிவோர் பெற்றோர்களே.

''மணத்துக்கு முந்திய காதல் என்பது—ரேடியம் முள்பதித்த பொற் கடிகாரம் என்றாலும், அது வருஷக் கணக்காகத் 'தடையின்றி ஓடும் என்று யாரும் உத்திரவாதம் கொடுக்கமுடியாது'' என்கிறார் காண்டேகர்.

வெகு விரைவில் மணல் சூடுபிடித்துக் கொள்ளும். அதைப் போலவே வெகு சீக்கிரத்தில் அது ஆறிப்போய் குளிர்ந்துவிடும். ஆனால் கருங்கல் அப்படி அல்ல. அது சூடேற வெகுநேரம் பிடிக்கும். அதைப் போலவே அது தணியவும் நீண்ட நேரம் ஆகும். இந்த உண்மை—திருமணத்திற்கு முன்னால் காதலித்து மணம் செய்து கொண்ட தம்பதிகளுள் பெரும்பாலோர்க்குப் பின்னால் தெரிந்திருக்கக்கூடும்!

''பெற்றோர்களின் விருப்பத்திற்கு இணங்க திருமணம் செய்து கொண்ட பெண்ணானவள் அறத்தை வளர்க்கிறாள்; தன் விருப்பப்படி திருமணம் செய்து கொண்ட பெண்ணானவள் துக்கத்திற்கு ஆளாகிறாள்'' என்கிறார் பாஸ்கர ராயர்.

நெடும் பண்டைக்கால முதல்—நம் நாட்டில், முறைப் பெண்—முறை மாப்பிள்ளைகளை மணந்து கொள்ளும் வழக்கம் இருந்து வருகின்றது.

இந்த முறைத் திருமணங்கள் பெரும்பாலும் திகட்டுவதும் இல்லை; தோல்வி அடைவதும் இல்லை.

இவர்கள் வாழ்வில் 'காதல் இல்லையே' என்று எவரும் குறை படுவதும் இல்லை!

இந்த இருபதாவது நூற்றாண்டில் கூட ஒருவர் முகம் ஒருவர் பார்த்தறியாத திருமணங்கள் அதிக அளவில் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன. திருமணப் பந்தலில் கூட மணமகனோ—மணமகளோ ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள முடியாது! தன்னுடைய மனைவியோ கணவனோ, கருப்பா—சிவப்பா, கவர்ச்சி இருக்கிறதா—இல்லையா என்பதொன்றும் எவரும் தெரிந்து கொள்ள முடியாது. திருமணத்தை முடித்துக் கொண்ட பின்னர்தான் படிப்படியாக இவற்றைப் பற்றியெல்லாம் தெரிந்து கொள்ள முடியும்.

ஆணுக்குப் பெண் பிடிக்காவிட்டாலும், பெண்ணுக்கு ஆணைப் பிடிக்காவிட்டாலும், பெற்றோர்களும் மற்றவர்களும் விரும்புகிறார்கள் என்பதால் திருமணம் செய்து கொண்ட ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தனக்கு வாய்த்த வாழ்க்கைத் துணையிடத்தில்—

உடற் பொருத்தம், குணப் பொருத்தம்,
மனப் பொருத்தம், அறிவுப் பொருத்தம்.

முதலான எல்லாவற்றிலும் ஒத்துப்போகவும், மன நிறைவோடு ஒருவர் மீது மற்றொருவர் அன்பு செலுத்தவும், ஆதரவு காட்டவும் முயற்சிக்கின்றார்கள். இதன் மூலம், தானாகவே மனைவிக்குக் கணவனிடத்திலும்—கணவனுக்கு மனைவியினிடத்திலும் காதல் ஏற்பட்டு வாழ்வு முழுதும் சீராகவும் சிறப்போடும் இருக்க இந்த முறைத் திருமணங்கள் உதவி செய்கின்றன.

கிரேக்க அறிஞர் புளூட்டார்க் சொல்கிறார்—"விளக்கு அணைந்த பின் பெண்கள் அனைவரும் அழகு வாய்ந்தவரே."

உலகெங்கும் உள்ள தம்பதிகளுள் பெரும்பாலோர் இந்த உண்மையை அறிந்தவர்களாக இருக்கக் கூடும்.

யாயு ஞாயும் யாரா கியரோ
எந்தையு நுந்தையு மெம்முறைக் கேளிர்
யானு நீயு மெவ்வழி யறிதும்
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந் தனவே

எனும் குறுந்தொகைப் பாடல் உலகெங்கும் உள்ள தம்பதிகளுள் பெரும்பாலோர் உள்ளத்தில் குடி கொண்டிருக்கிறது? அவன் யாரோ? அவள் யாரோ? அவன் தந்தையும், அவள் தந்தையும் எந்த வழியில் உறவினர்? ஆனால், இப்போது செம்மண்ணில் பெய்த நீர் போன்று அவர்கள் இருவருடைய உள்ளங் கலந்து உறவு கொண்டு விட்டன! இது போலவே இவர்களுடைய தாய் தந்தையர்களும் அவர்களுடைய பெற்றோர்களால் மணம் முடித்து வைக்கப் பெற்று பின்னர் ஒன்றாகி வாழ்ந்தவர்கள்.

இயற்கை நியதியுடன் இணைந்து விடுவது இவர்களுக்கு மட்டும் உரியது அல்ல. இவர்களுடைய பெற்றோர் எப்படி இந்த மனை வாழ்க்கையை ஏற்றுக் கொண்டு, கற்றுத் தேறினார்களோ—அதேபோல, வாழையடி வாழையாக இவர்களும் இந்த இல் வாழ்க்கையை நடத்திச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

"பெண்களை (ஏன்?—ஆண்களையும்) உயர்த்தவழி ஆணுக்கும் பெண்ணுக்கும் காதல் இல்லாமலே நட்பு உண்டாகச் செய்வதுதான். அதுவும் திருமணமான பின்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே இந்நட்பு ஏற்பட்டால் இன்னும் நன்மை பயக்கும்" என்கிறார் பிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார்.

இல் வாழ்க்கையின் ஆரம்பத்தில் ஒருவருக்கு ஒருவர் வலுக் கட்டாயமாக நெருங்கி வாழத் தொடங்குவதால், கணவனிடத்தில் மனைவிக்கும், மனைவியினிடத்தில் கணவனுக்கும் காணப்படும் குற்றங் குறைகளைக் கருத்தில் கொள்ளாமல் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாய் மனை வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். இல்வாழ்க்கை நன்கு நடைபெற அன்பும் அறனும் இன்றியமையாதவை.

# மின்சார அதிர்ச்சி...?

*திரு R. கோபாலகிருஷ்ணன், A. E. E.*

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான பேர்கள் மின்சார அதிர்ச்சியினால் தாக்கப்படுகிறார்கள். இவர்களில் பலர் இறந்தும் விடுகிறார்கள். காணாமற்போன ஆடு மாடுகளைத் தேட, மின்சாரக் கோபுரத்தில் ஏறி அருகாமையில் அவை எங்காவது தென்படுகின்றனவா என்று பார்க்கும் கிராமவாசி - மின்சாரக் கம்பியில் மாட்டிக்கொண்ட பட்டத்தை எடுப்பதற்காகக் கம்பத்தின்மீது ஏறும் சிறுவன்-இப்படிப் பலதரப்பட்டவர்களும் தங்களை அறியாமலேயே ஆபத்தில் மாட்டிக் கொள்வது தான் பரிதாபத்திற்குரிய விஷயம்.

மின்சார அதிர்ச்சிக்குக் காரணம் என்ன? மின்அழுத்தமா? (Pressure) இல்லை, மின் ஓட்டமா? (Current) உண்மையில் இரண்டுமேதான். மனித உடலில் 50 மில்லி ஆம்பியர் மின் ஓட்டம் ஏற்பட நேரிட்டால் அந்தத் தாக்குதல் உயிரைக்குடித்து விடும். (ஒரு சாதாரண பல்பின் வழியே ஏற்படும் மின்னோட்டம் சுமார் 200 மில்லி ஆம்பியர் என்பது கவனிக்கத்தக்கது) இந்த மின்னோட்டம் குறைந்த மின் அழுத்தத்தால் ஏற்பட்டாலும் சரிதான், அல்லது மின் அழுத்தத்தால் ஏற்பட்டாலும் சரிதான். பலத்த மின் அழுத்தத் தாக்குதல் ஏற்பட்டும் பிழைத்தவர்கள் பலர் இருக்கிறார்கள். குறைந்த மின் அழுத்தத்தின் அதிர்ச்சியால் இறந்து போனவர்களும் உண்டு.

மின் அதிர்ச்சி பலமாகவோ அல்லது வலுவற்றதாகவோ இருப்பதற்கு முக்கிய காரணம் உடலின் மின் தடை (Resistance) தான். உடலின் மின் தடை குறைவாக இருக்குமானால் நாம் அதிக மின்னோட்டம் ஏற்பட வழி செய்கிறோம். உடலின் மின்தடை அதிகமாக இருந்தால் மின் அதிர்ச்சி அவ்வளவு பலமாக இராது.

உடலின் மின்தடை சில சமயம் குறைவாகவும் சிலசமயம் அதிகமாகவும் இருப்பது ஏன்? உங்கள் உடல், கைகள், கால்கள் உறுப்புக்கள் ஈரமாகஇருந்தாலும், நிற்கும் தரை, சுவர்கள் முதலியவை ஈரமாக இருந்தாலும் அவை மின்சாரத்தைச் சுலபமாகக் கடத்த ஆரம்பித்து விடுகின்றன. எர்த் (பூமி) திற்கும் உடலுக்கும் இடையேயுள்ள மின் தடை குறைந்து மின் அதிர்ச்சி பலமாகி விடுகிறது. மின் கம்பிகளை நன்றாகப் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள்.அல்லது கம்பிகள் அறுந்து உங்கள் உடம்பின் மேல் விழுந்து விடுகின்றன என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது உடல் வழியே ஏற்படும் மின்னோட்டத்திற்கு ஏராளமான பாதைகள் கிடைக்கின்றன. உடலின் மின் தடை குறைந்து தாக்குதல் பலம் பெற்று விடுகிறது. அப்போது மனிதன் ஆபத்துக்குள்ளாகிறான். விரல் நுனிகளில் மட்டும் மின் கடத்தும் கம்பிகள் படும்போது அதிர்ச்சி குறைவாக இருப்பதற்கும் காரணம் இதுவே,

ஏ. ஸி. மின்சாரம் வலுவாகத் தாக்குமா? இல்லை-டி. ஸி.-யா? பல பேர் ஏ. ஸி. தான் மிகவும் ஆபத்தானது என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். வேகமாக வரும் எக்ஸ்பிரஸ் வண்டி முன் விழுவது

நல்லதா, இல்லை பதின்மூன்றுவது மாடியிலிருந்து தரையில் குதிப்பது தேவலையா என்றுகேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்? அதே போலத்தான்—ஏ. ஸி. ஷாக்காகட்டும், இல்லை டி. ஸி. யின் அதிர்ச்சியாகட்டும் — இரண்டுமே தீங்கு விளைவிப்பவைதான். நமது இருதயத் துடிப்பு நிமிடத்திற்குச் சுமார் எழுபத்தெட்டு தடவைகள் என்ற வேகத்தில் வேலை செய்கிறது. மின் அதிர்ச்சி ஏ. ஸி. யால் ஏற்பட்டதானல் உடல் விநாடிக்கு நூறு தடவை விட்டுவிட்டுத் தாக்கப்படும். அப்போது அந்தப் புது எதிரியைச் சமாளிக்க முடியாமல் இருதயம் தடுமாறும்.

மெயின் சுவிட்சை அணைத்துவிட்டே மின்சார வேலைகள் செய்வதை வழக்கமாகக் கொள்ளுங்கள். எங்கே அதிக மின் அழுத்தம்— அபாயம் என்று குறிப்பிட்டிருக்கிருர்களோ, அங்கே ஜாக்கிரதையுடனேயே இருக்கவேண்டும்.

உங்கள் வீட்டில் மின்சார போர்டில் உள்ள ஃப்யூஸ் (Fuse) உங்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக ஏற்பட்டது. அதனுடன் விளையாட வேண்டாம். வீட்டில் எங்கேயாவது ஷார்ட் சர்க்யூட் (Short circuit) ஏற்பட்டால் அதனுல் தீவிபத்துப்போன்ற ஆபத்துக்கள் நேரலாம். அப்போது அங்கே மின்சாரத்தைத் துண்டிக்கவே ஃப்யூஸ்கள் இருக்கின்றன. ஃப்யூசுக்குப் பதிலாக ஒரு சிலர் தடித்த கம்பிகளைப் பொருத்தும் வழக்கமுடையவர்களாக இருக்கிருர்கள். இது ஆபத்தை எதிர்கொண்டழைக்கும் சுலபமான வழி. ஆங்காங்கே சரியான அளவுகம்பிகளைத்தான் ஃப்யூஸ்களாக உபயோகிக்க வேண்டும். எந்தக் கம்பியையாவது உபயோகிக்கலாம் என்பது இல்லை.

தொய்ந்து போன கம்பிகளை உபயோகிக்க வேண்டாம். கம்பிகள் மீதுள்ள ரப்பர், ப்ளாஸ்டிக் உறைகள் ஆங்காங்கே பிய்ந்து இருக்குமானுல் அவை மின்அதிர்ச்சி கொடுக்கக் கூடியவை என்பது மட்டுமல்ல, தீ விபத்துக்களை உண்டாக்கும் சக்தியும் வாய்ந்தவை.

ரேடியோ, ஹீட்டர், மோட்டார் பம்புகள், ரிஃப்ரிஜரேடர் போன்ற உபகரணங்களுக்கு எப்போதும் உடல்-எர்த்(Body-earth)இருக்கும். இந்தப் பிணைப்பு மிகவும் முக்கியமானது என்பதை அறியவும். இந்த எர்த் இல்லை என்ருல் ஷாக் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

பாத்ரூம்களிள் சுவிட்சு முதலியவற்றைக் கையாளும்போது மிகுந்த ஜாக்கிரதை வேண்டும். ஈரமான விரல்களாலே சுவிட்சு, பல்பு, ப்ளக் முதலியவற்றைத் தொடக்கூடாது.

ரேடியோவின் மின்சாரப் பாதையை விலக்காமல் (பிளக்கை எடுக்காமல்) அவற்றில் வேலை செய்வது ஆபத்தைத் தரக் கூடியது. மின்சாரப் பிணைப்பு இல்லாத சமயங்களில் கன்டென்ஸர்கள் உங்கள் உடல் வழியே 'டிஸ்ச் சார்ஜ்' ஆக நேர்ந்தால் ஷாக் அடிக்கும். பெரும்பாலான ரேடியோக்களில் வழக்கத்தைவிட அதிகமான மின் அழுத்தங்கள் கையாளப்படுகின்றன. ரேடியோ முதலிய உபகரணங்களை —அவற்றைப் பற்றிய விஷயங்கள் உங்களுக்குத் தெரிந்தாலொழிய— பிரிப்பதும், ரிப்பேர் செய்வதும் கூடாது,

இழை அறுந்து ஃப்யூஸாகிப் போன பல்புகளைப் புதுப்பித்துத் தரக்கூடிய சில நண்பர்களை எனக்குத் தெரியும். இவர்கள் எப்படியாவது பல்பைச் சாய்த்து, உருட்டி, தட்டி, ஆட்டி இழைகளை ஒட்ட வைத்துக் கொடுப்பார்கள். நண்பர்களே! இந்தமாதிரி பல்புகள் மீண்டும் எரியும் போது இன்னும் பிரகாசமாக இருப்பதைப் பார்த்

திருக்கிறீர்களா?—ஏன்? அதிக மின் னேட்டம் தானே காரணம்? பல்பு களைப் புதுப்பிக்கும் முயற்சி இனி வேண்டாம்; அதில் ஆபத்து இருக் கிறது.

மின் அதிர்ச்சியினுல் யாராவது தாக்கப்பட்டால் அவருக்கு உதவி உடனே தேவை என்று அறியுங் கள். மரக்கட்டை போன்ற மின் கடத்தாப் பொருளினுல் தாக்கப் பட்டவரை மின் ஓட்டத்தினின்றும் முதலில் விடுவிக்க வேண்டும். மின் சாரத்தை உடனே நிறுத்தத்தேவை யான முயற்சிகளைச் செய்ய வேண் டும். உங்கள் வீட்டிலும் மற்றும் நீங்கள் சாதாரணமாகப் புழங்கும் இடங்களான—பள்ளிக்கூடம், காரி யாலயம்போன்ற மற்றக் கட்டிடங் களிலும்—மின்சாரமெயின் சிவிட்சு கள் முதலியன இருக்குமிடத்தைத் தெரிந்து வைத்துக் கொள்வது உபயோகமாக இருக்கும்.

மின் அதிர்ச்சியினுல் தாக்கப் பட்டவரை விடுவிக்கும் முயற்சி யில் நீங்களும் தாக்கப்பட்டு விடா தீர்கள். மின்சாரத்தினுல் தாக்கப் பட்டவர்களுக்கு அளிக்கப்படும் முதல் உதவியைப் பற்றிய அறிவு உதவியாக இருக்கும். அதுபற்றி தெரிந்துகொள்க! —"குருகுலம்"

(புதிர்ப் பாடல்)

# சோளப் பொரி!

**கவிஞர். தமிழழகன்**

பொரியாம் பொரியாம் சோளப்பொரி!
போட்டு வைத்த சோளப்பொரி!
குறியாய் எவரோ இரவெல்லாம்
கொண்டி றைத்த சோளப்பொரி!
வெறியாய் எவரோ தளிரெல்லாம்
வீசிப் போன சோளப்பொரி!
சரியாய் எவரும் பொறிக்கவும்தான்
சரிப் படாத சோளப்பொரி!
தெரியா மல்தான் உடனேயே
திருடு போகும் சோளப்பொரி!
புரிய அவற்றை உணர்ந்தவர்தாம்
புகல்வீர்; என்ன சோளப்பொரி?

விடை: விண் மீன்கள்

# புகை பிடிப்பதனுல் விளையும் பயங்கரமான விளைவுகள்

சுருட்டப்பட்ட சிறு துண்டுக் காகிதம் மூன்று அங்குலம் நீளம்-ஒரு அங்குலம் சுற்றளவு-குறைந்த அளவு புகையிலைத் தூள்! இந்த சிறு வஸ்து 20-ம் நூற்ருண்டின் மிகப் பெரிய ஆட்கொல்லி யாக விளங்குகிறது. நம்ப முடியவில்லையா? இக் கட்டுரையைப் படித்துப் பாருங்கள்—விளங்கும்!

அணு குண்டு போடப்பட்டால் ஏராளமான மக்கள் அழிகிருர்கள். அந்த பயங்கர அழிக்கும் ஆயுதத்துக்கு எந்த வகையிலும் சளைத்த தில்லை புகை பிடிக்கும் பழக்கம்.

இதை அறியாதவர் எவருமில்லை. இருந்தாலும் இரு விரல்களுக்கிடையில் வெண்மையான அந்த சிகரெட்டை லாவகமாகப் பிடித்து, உதடுகளுக்கிடையே இருத்தி, புகையை உறிஞ்சி, பின் அதை மூக்கு வாய் வழியாக வெளி விடுவதில் ஆனந்தப்படுவார்கள்.

## கஷ்ட நிலைமை

உதடு கருக்கிறது. நெஞ்சு எரிகிறது. வாய் நாறுகிறது. இருமல் வருகிறது. தலைவலி உண்டாகிறது. ஜீரண சக்தி கெடுகிறது.

ஆனாலும் அந்தப் புகைக்குடியை விட முடியுமா? மதுபானத்தின் போதையைப் போன்று சிகரெட் குடி போதையும் மக்களைப் பெருமளவு வசிகரித்துள்ளது.

'புகைக் குடியால் ஆபத்து விளையவில்லை' என்று ஒரு நாளைக்கு நாற்பது சிகரெட்டுகளை ஊதித் தள்ளுகிறவர்களும் கூறுவதில்லை. இத் துறையில் ஆராய்ச்சி செய்யும் டாக்டர்களோ தினத்துக்கு ஒரு கோய், புகைக் குடியால் ஏற்படுவதாகக் கணக்கிடுகிருர்கள்.

## கடையில் வாங்கலாம்!

சிகரெட் பிடிப்பதை மறப்பதற்குத்தான் எத்தனை, எத்தனை புது வழிகள்! ஒரு சிகரெட் எடுத்தபின் மூன்றுமணி நேரத்துக்கு திறக்க முடியாதபடி மூடிக்கொள்ளும் நவீன சிகரெட் பெட்டி ஒன்று! இந்தப் பெட்டி இருந்தாலும் வேண்டுமென்றபோது கடையில் வாங்கிக் கொள்ள முடியாதா, என்ன?''— என்கிருர் ஒரு புகைப் பிரியர்.

புகைக் குடிக்கும் புற்று நோய்க்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பதாக டாக்டர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். பிரிட்டன் டாக்டர்கள், உலக சுகாதார ஆராய்ச்சி ஸ்தாபனத்தினர் ஆகியோர் இது பற்றி உறுதி கூறியுள்ளனர்.

புகைப்பது அதிகம் ஆக ஆக நுரையீரலில் புற்று நோய் ஏற்படுவது அதிகமாக ஆகிறதென்று அவர்கள் கூறியுள்ளனர்.

## இரட்டிப்பாகியது

பிரிட்டனில் கடந்த பதினைந்து ஆண்டு காலத்தில் புகை பிடிப்பது இரட்டிப்பாகியுள்ளது. புகையிலையால் தயாரிக்கப்படும் வேறு பொருள்களைவிட சிகரெட்டுகள் எட்டு மடங்கு அதிகம் விற்பனையாகின்றனவாம்.

## புகைக்கும் பெண்கள்

கடந்த சில ஆண்டுகளாக சிகரெட் பிடிக்கும் ஆண்களின் சதவிகிதத்தில் அதிகரிப்பில்லை. ஏனெனில் இது எவ்வளவு அதிகமாக இருக்க முடியுமோ, அந்தவரம்பு ஏற்கனவே கிட்டிவிட்டது. இப்பொழுது பெண்கள் சிகரெட் பிடிப்பது அதிகமாகி வருகிறது.

சினிமா, டெலிவிஷன் பத்திரிகைகள் ஆகியவற்றில் சிகரெட் பிடியுங்கள் என்று மக்களைத் தூண்டும் விளம்பரங்கள் கவர்ச்சியாக உள்ளன. நெஞ்சு நிறைய புகையை உறிஞ்சி இழுத்து நிதானமாக அதை வெளியிடுபவர்களை இவை புதிதாக வசீகரிக்கப் போவதில்லை ஆனல் சின்னஞ் சிறு பிஞ்சு உள்ளங்களின் நிலைமை...?

லண்டன் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சி கவுன்சில் டைரக்டர் டாக்டர் ஆர். டால் புகை பிடிப்பதால் புற்றுநோய் வருவது உண்மையென்று கூறியிருக்கிருர்.

## பெரியதாக்கும்

சிகரெட் பிடிப்பதால் நேரடியாக புற்றுநோய் வருவது மட்டுமில்லை. அது புற்றுநோய் அதிகமாகவும் வழிசெய்கிறது. சிறிய இரணம் போதும் அதை பெரியதாக புகைக்குடி மாற்றிவிடுகிறது.

எலிகள் முயல்களிடம் இதைப் பரிசோதித்து உண்மையை கண்டு பிடித்திருக்கிருர்கள்.

குறைவாக புகை பிடிக்கும் நாடுகளான தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா ஆகிய இடங்களில் பிரிட்டனை விட நுரையீரல் புற்றுநோயால் குறைவான நோயாளிகளே மரிக்கின்றனர்.

## காற்றில் தூசி

காற்று தூசி நிறைந்து இருப்பதால் மட்டுமே நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதாக ஒரு காலத்தில் எண்ணப்பட்டது. ஆனல் பெரிய தொழிற்சாலைகள் இருக்கும் பிரதேசங்களில் வசிப்பவர்கள் புற்றுநோயால் மடிவதைவிட சிகரெட் பிடிப்பதால் மடிபவர்களின் தொகை அதிகமாக உள்ளது.

பெண்கள் ஆண்கள் இருபாலாரிடையேயும் சிகரெட் பிடிப்பதால் ஏற்பட்ட நுரையீரல் புற்றுநோயால் மரிக்கும் விகிதம் சமமாகவே உள்ளது.

'சிகரெட் பிடிப்பதும் புற்றுநோயும்' என்ற விஷயம் பற்றி ப்ரிட்டனில் ஆராய்ச்சி சிரத்தையுடன் செய்யப்பட்டு வருகிறது.

## இந்தியாவில்

இந்தியாவிலும் சிகரெட் பிடிப்பதைத் தடுக்க சில முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன சினிமாக்கள், பள்ளிகள் ஆகியவற்றில் புகை பிடிப்பது தடுக்கப்பட்டுள்ளது. சில ராஜ்யங்களில் குறிப்பிட்ட வயதுக்குக் குறைந்தவர்களுக்கு சிகரெட் விற்கலாகாது என்று சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஜப்பானில் சிகரெட் விளம்பரத்துக்காக செலவிடப்படும் பணம் வீண் விரயம் என்று கூறி பெண்கள் போர்க் கொடி உயர்த்தியிருக்கிருர்கள்.

ஆனல், புகை பிடிப்பவரோ...... "என நுரையீரல் புகைக் கூண்டு போல் கரியடைந்தாலும் பரவாயில்லை" என்று கூறிக்கொண்டு புகையை உறிஞ்சி, ஊதித் தள்ளிக் கொண்டிருக்கின்றனர்.

(ஆதாரம்-ஸ்வஸ்த் ஹிந்து)
உதவி: "நவசக்தி"—நன்றி.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

# பொருளாதார வளர்ச்சி (2)

டாக்டர் எம். ஜே. கே. தவராஜ் *M. A., PH. D.*

தொழிற் புரட்சியின் தாயகமாக விளங்கிய இங்கிலாந்தில் இயற்கை அருள் சுரந்து செல்வங்களை அளவின்றி அள்ளிவழங்கினர்கள்என்று சொல்ல இயலாது. இரும்பும் நிலக்கரியும் போக்குவரத்துக்கான நதிகளும் இருக்கத்தான் செய்தன. இருந்தும் அந்நாடு பெரிதும் வாணிபத்தையே நம்பி வாழ்ந்து வந்தது. 'எவனைச் சுரண்டியாவது என் வயிறு வளர்ப்பேன்' என்ற குறிக்கோளால் உந்தப்பட்ட பலர் சர்வாதீன உரிமை பெற்ற வாணிபக் குழுக்களாக அமைந்து திரைகடலோடித் தங்கள் வாணிப உரிமைகளையும் அரசியல் ஆதிக்கத்தையும் நிலைநாட்டி அதன் வாயிலாகக் கொள்ளை லாபம் அடித்து வந்தனர். இத்தகைய இலாப வேட்கையையும் ஆதிக்க வெறியையும் அரசாங்கம் தூபமிட்டுத் தூண்டிவந்தது. அதன் பயனாக வெள்ளியும் பொன்னும் இங்கிலாந்தினுள் வந்து குவிந்தது. அவற்றைக் கையாளக் கூடிய பாங்குகள் ஆங்காங்கே தோன்றின, வணிகரின் கையில் தேங்கிக் கிடந்த சேமிப்புகளைத் திரட்டி முதலீடு செய்யக் கூடிய வாய்ப்புகள் வளர்ந்தன. அதன் விளைவுதான் தொழிற் புரட்சி.

தொழிற் புரட்சியால் தூண்டப்பட்ட பொருளாதாரம் ஆண்டொன்றுக்கு இரண்டு முதல் மூன்று சதவிகித வேகத்தில் வளர்ந்து வந்தது. அதன் அடிச்சுவட்டைப் பின்தொடர விரும்பிய மேற்கு ஐரோப்பிய அரசாங்கங்களும் சற்றேறக் குறைய இதே வேகத்திலேயே தங்கள் பொருளாதாரங்களைக் கட்டி வளர்க்க முடிந்தது. கானடாவும் ஆஸ்டிரேலியாவும் இக் குடும்பத்தைச் சார்ந்தவையே.

அமெரிக்காவில் :

இயற்கையின் கண்சிமிட்டலுக்கு இசைந்து அமெரிக்காவில் குடிபுகுந்த ஐரோப்பிய மக்கள் 'முயற்சி திருவினையாக்கும்' என்ற முதுமொழிக்கேற்ப ஊக்கமும் உள்வலியுங்கொண்டு உழைத்து இயற்கை அள்ளிவழங்கிய செல்வங்களைத் தங்களது உழைப்பின் சின்னங்களான இயந்திரம், இரசாயனம், மின்சாரம் ஆகியவற்றின் துணைகொண்டு கைவசப்படுத்தி உலகில் வேறு எவருக்கும் இதுவரை கிட்டாததோர் வாழ்க்கைத்தரத்தை அனுபவித்து வருகின்றனர். இருப்பினும் 1869-1969 வரையுள்ள காலத்தில் அமெரிக்கப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகம் ஆண்டொன்றுக்கு நான்கு சதவிகித அளவிலேயே இருந்துவந்தது. அதன் பின்னர் அது உலகை உலுக்கியதோர் பயங்கரமான வாணிபச் சுழலில் சிக்கிச் சிதைந்தது.

ஃபிராங்க்ளின் ரூஸ்வெல்ட் அளித்த புதுத் தீர்ப்பின்கீழ் ஓரளவு உயிர்ப்பிச்சை பெற்று வந்த அப்பொருளாதாரம் இரண்டாம் உலகப் போராலும் அதன் பின்னால் ஏற்பட்ட கெடுபிடிப் போராலும் நிறைவேற்றப்படாமல் குமுறி நின்ற தேவைகளாலும் பெரிதும் தூண்டப்பட்டது ஆனால் சமீப காலத்தில் அதன் வேகம் மறுபடியும் தளர்ந்து. ஆமை வேகத்தில் அசைந்து வருகிறது. இத்தகைய சிக்கலுக்கு வற்றிவரும் வளங்களும்,

வரண்டுவரும் வாய்ப்புகளும்,முரண் பாடுமிக்க உற்பத்தி உறவுமே மூல காரணங்களாகும்.

## ஜப்பானில் :

முதலாளித்துவப் பொருளாதாரங் களிடையே வளர்ச்சி வேகத்தில் முதலிடம் வகிப்பது ஜப்பான். 1868-ம் ஆண்டுக்குப் பின்னரே ஜப் பான் தனது பொருளா தாரத்தைத் தொழில் மயமாக்கும் முயற்சியில் ஈடுபடலாயிற்று. இயற்கை கண் திறந்து பார்த்த நாடு என்றும் ஜப் பானை அழைக்க இயலாது. இங்கி லாந்தைப் போன்றே ஜப்பானும் வாணிபத்தை நாடி வாழவேண்டி யிருந்தது. ஆனால் இங்கிலாந்துக்கு இருந்ததுபோல் பெரிய சாம்ராஜ் யம் எதுவும் ஆரம்பத்தில் ஜப்பா னுக்கு இருந்ததில்லை. இருப்பினும் இடையருது உழைத்துப் பொரு ளீட்டிச் சிக்கனமாகச் செலவிட்டு மீந்ததைச் சேமித்து ஆக்கத்துறை களில் முதலீடு செய்யக் கூடிய மக் கள் இருந்தார்கள். அவர்களது முயற்சிகளுக்கு ஊக்க மளிப்பதோ டல்லாமல் நிலச்சீர்திருத்தம், அர சாங்க முதலீடு, அறிவியற் கல்வி ஆகிய துறைகளிலும் முன்னணியில் நின்று தனியாரின் முயற்சிகளுக்கு அரசாங்கம் துணை செய்தது. எனவே வெகு விரைவில் ஜப்பானியர் மேனாட்டு உற்பத்தி முறைகளைப் பயின்று தமதாக்கினர். கைத்திறங் காட்டி ஆக்கிய பண்டங்கள் ஆசிய மார்க்கட்டுகளை ஊடுருவிப் பாய்ந் தன. சந்தைகளிலும் கச்சாப் பொருள்களிலும் நாட்டம்கொண்ட அரசாங்கம் நாடு பிடிக்கும் ஆசை யாலும் பீடிக்கப்பட்டது. ஃபார் மோசா-கொரியா முதலிய நாடுகள் ஜப்பானின் கைவசமாயின. அவற் றில் செறிந்திருந்த கனிப்பொருட் களைக்கொண்டு தங்கள் தொழில் களைத் தூண்டி வளர்க்க முற்பட்ட னர். இத்தகைய முயற்சிகளால் 1887-1930 வரையுள்ள காலத்தில் ஜப்பானிய பொருளாதாரம் ஆண் டொன்றுக்கு ஆறு முதல் ஏழு சத விகித வேகத்தில் வளர்ந்து வந்தது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்னரும் அப்பொருளாதாரம் என்றுமிலா மிடுக்குடன் ஓங்கி வளர்ந்து வருகிறது.

## சோவியத் ருஷ்யாவில் :

இருப்பினும் விருப்பு வெறுப்பற்ற முறையில் ஆராயப் புகுந்தால் சம தர்ம அடிப்படையில் அமைந்த நாடு களின் பொருளாதார வளர்ச்சி யானது மற்றப் பொருளாதாரங் களைக் காட்டிலும் வேகமாக முன் னேறவல்லது என்பது புலனாகும். ரஷ்யாவை எடுத்துக் கொள்வோம், அமெரிக்காவைப் போலவே அங்கும் மனிதனின் காலடிபடாத கன்னி நிலங்களும், கைக்கு எட்டாத கனிப் பொருள்களும்செறிந்து விளங்கின. வளர்ச்சிக்கான முயற்சிகள் பத் தொன்பதாம்நூற்றாண்டின் பின்பகு தியிலேயே ஆரம்பமாயின. வெனி னும் உக்ரெயின் போன்ற மேற்கத் திய பகுதிகளே பெரும்பாலும் வளர்ச்சிக்கு இலக்காயின. வளர்ச்சி வேகமும் கணிசமாக இல்லை. இந் நிலையில் அப் பொருளாதாரத்தில் தோன்றிய முரண்பாடுகள் வளர்ந்து முற்றி முதலாவது உலகப் போரின் போது புரட்சியாக வெடித்து முத லாளித்துவ உற்பத்தி முறைக்கே உலைவைத்து விட்டது. பொருளாதா ரத்தின் உயிர்நிலைகளைக் கைப்பற் றிய அரசாங்கம் எஞ்சிய பகுதிகளில் கொஞ்ச் காலத்துக்கு முதலாளித்து வத்துக்கு உயிர்ப்பிச்சை யளித்து வந்தது. ஆனால் நாளடைவில் அம் முதலாளித்துவத் திட்டுகளைப் புட மிட்டு அழித்துக் கூட்டுறவு அமைப்புகளையும் சமதர்ம சக்திகளை யும் பலப்படுத்தியது.

பொருளாதார வளர்ச்சிக்கு உறு துணையான முதலைத் திரட்டி நீண்ட காலக் கண்ணோட்டத்தின் அடிப் படையில் அதைத் திட்ட மிட்ட

முறையில் ஈடுபடுத்தி அதுவரை எங்குமே கண்டிராத வேகத்தில் வளரத் தொடங்கியது. இரண்டாவது உலகப் போரால் அதன் பொருளாதாரம் பத்தாண்டுகள் பின்னுக்குத் தள்ளப்பட்டது. எனினும் அதன் பின்னர் அதன் வளர்ச்சி வேகம் முன்போலவே அதிகரிக்கலாயிற்று. வளர்ச்சிக்கான இந்த ஓட்டத்தில் சோவியத் யூனியன் ஏனைய ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் ஏற்கனவே முந்திவிட்டது. இது உலகிலேயே செல்வமிக்க நாடாகிய அமெரிக்காவைத் தொடர்ந்து நெருங்கிக் கொண்டிருக்கிறது.

சோவியத் பொருளாதார வளர்ச்சியின் வேகத்தைப் பற்றி ஆரம்பத்தில் பலரும் மாறுபட்ட கருத்துக்களைத்தெரிவித்து வந்தனரெனினும் அப் பொருளாதாரம் கிட்டத்தட்ட பத்து சதவிகித வேகத்தில் வளர்ந்து வருகின்றது என்பதை இன்று பெரும்பாலோர் ஒப்புக் கொள்கின்றனர். சோவியத் கூட்டுப்பண்ணைகளும் தங்கள் ஆக்க சக்தியைப் பெருக்குமேயானால் சோவியத் பொருளாதாரம் இன்னும் வேகமாக முன்னேற முடியும்.

## கிழக்கு ஐரோப்பாவில் :

இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் சீனாவிலும் சமதர்மத்தில் நம்பிக்கை கொண்ட அரசாங்கங்கள் ஆட்சி பீடத்தில் அமர்ந்தன. கிழக்கு ஐரோப்பாவில் ரஷ்யாவைப் போன்று அத்துணை செல்வம் கொழிக்கவில்லை. மக்கள் நெருக்கமும் மிகுதி. முதலாளித்துவ சக்திகளும் முழுவதுமாக முறியடிக்கப் படவில்லை. பெரும்பாலான மக்கள் கம்யூனிஸ்ட் ஆட்சியை முழு மனதுடன் வரவேற்றார்கள் என்றும் சொல்ல இயலாது. இருப்பினும் திட்டமிட்ட பொருளாதாரவளர்ச்சி என்ற அடிப்படையில் இந்நாடுகள் தங்கள் சக்திகளை ஒரு முகமாகச் செலுத்திச் சராசரி எட்டு முதல் பத்து சதவிகித வேகத்தில் வளர்த்து வருகின்றன.

## சீனாவில் :

சீனாவும் இதற்கு விதிவிலக்கல்ல. வளமிக்க நாடுதான்எனினும் மக்கட் தொகை அதையும் மிஞ்சும் நிலையில் உள்ளது. இருப்பினும் கடின உழைப்பில் நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள். அவர்களது நம்பிக்கைக்குரிய தலைவர் பலர் சமதர்மம் வெற்றிபெற வேண்டும் என்ற உறுதியுடன் செயலாற்றி வருகின்றனர். இம் முயற்சிகளுக்கு அண்மைக் காலம்வரை சோவியத் யூனியன் ஆதரவு இருந்து வந்தது. எனவே சீனப் பொருளாதாரம் தம் மக்களின் சக்திகளை ஆக்க முயற்சிகளில் செலுத்தி உற்பத்தி உறவுகளைக் கூட்டுறவு, சமதர்மம் என்ற அடிப்படையில் மாற்றியமைத்துத் தேக்க முற்றுக் கிடந்த பொருளாதாரத்தைத் தூக்கி விட்டு வேகமாக முன்னேறிவந்தது. ஆனால் சமீப காலத்தில் 'கம்யூன்களில்' ஏற்பட்ட சிக்கல்கள், இயற்கை இழைத்த இன்னல்கள்' அண்டை நாடுகளோடு கொண்டிருந்த உறவுக்கு ஏற்பட்ட கேடு ஆகிய காரணங்களால் சீனப் பொருளாதாரத்தின் வளர்ச்சி, வேகம் சற்றுத் தணிந்து வருகிறது. இந்நிலையில் அதன் எதிர் காலம் எப்படி இருக்கும் என்று எளிதில் கூறுவதற்கில்லை.

## இந்தியாவில்:

நம் நாடும் நிலவளம் மக்கட் பெருக்கம் ஆகியவற்றில் கிட்டத்தட்ட சீனாவை ஒக்கும். சுரண்டலை அடிப்படையாகக்கொண்டிருந்த ஆங்கில ஆட்சியின் கீழ் தேக்க முற்றுப் பின்தங்கிப் போயிருந்த நம் பொருளாதாரத்தை ஜனநாயக அடிப்படையில் திட்டமிட்டுத் தூண்டுவதற்கு முயன்று வரு

கிறோம். வரி விதிப்பு, பணவீக்கம், அயல் நாட்டுக் கடன் ஆகியவற்றின் மூலம் மூலதனத்தைத் திரட்டி அதைத் திட்டத்துக்கு உட்பட்ட வகையில் ஈடுபடுத்தி அதன்மூலம் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதே நம் அவா. இருப்பினும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் நமது பொருளாதாரம் ஆண்டொன்றுக்கு இரண்டு சத விகித வேகத்தில் கூட வளரவில்லை என்பது வருந்தத்தக்கது.

“பொருளாதார வளர்ச்சியையே முக்கியமாகக் கருதி அதற்கேற்ற வகையில் செயல்படத் துடிக்கும் தலைவர்கள் இங்கு இல்லை; அவர்களுக்கு உறுதுணையாக நின்று ஆக்கமுள்ள கொள்கைகளை உருவாக்கக்கூடிய அதிகார வர்க்கமில்லை; உற்பத்தி உறவுகள் வளர்ச்சிக்கான வகையில் அமையவில்லை; களைகளைக் களைந்தெறியா விட்டால் பயிர்கள் வளர்வதெப்படி”?...என்ற பல குற்றச்சாட்டுகள் காதில் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. இவை அனைத்துமே ஓரளவு உண்மையாக இருக்கலாம்-அதன் விளைவு தான் தளர்ச்சியுற்ற வளர்ச்சி!

எனவே, இயற்கை அன்னையின் அருட்கண் திறந்தால் மட்டும் போதாது. அவள் அள்ளி வழங்கும் செல்வங்களைத் தமதாக்கி அனுபவிக்கும் திறம்படைத்த மக்கள் வேண்டும். அம்மக்களைக் காத்து அரவணைத்து ஆக்கப் பணியில் ஊக்குவிக்கும் அரசியல் - பொருளாதார அமைப்புகளும், உறவு முறைகளும் அமையவேண்டும். அப்போது தான் பொருள் வளம் பெருகும். பொருளாதார வளர்ச்சியில் துடுக்கும் மிடுக்கும் காணப்படும்.

## பொருளாதார ஏற்றத் தாழ்வு

தனி நபர் மெய்வருவாய் வளருகின்றது, அல்லது பொருளாதாரம் வளருகின்றது என்று சொல்லும்போது நாட்டு மக்கள் அனைவரின் மெய்வருவாயும் வளரும் என்று கொள்ளலாகாது, சிலரது வருவாய் வளரும்; பிறரது வருவாய் தேயும் அல்லது தேக்கமுறும். நாட்டு வருவாய் கூடிவரும்போது பலரது வருவாய் தேக்கமுற்றால் அல்லது தேய்ந்து வந்தால் நாட்டுவருவாயின் பங்கீடு பாதிக்கப்படும். பணக்காரது வருவாய் தேய்ந்து ஏழைகளின் வருவாய் வளருமானால் பங்கீடு சமத்துவத்தை நெருங்கி வருகிறது என்று சொல்லலாம். மாறாக, பணக்காரன் கொழுக்கவும் ஏழைகள் நலியவும் நேர்ந்தால் பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வுகள் வளருகின்றன என்று உணரலாம். இவ்வாறு வருவாயிலுள்ள ஏற்றத் தாழ்வுகள் குறைவதுடன் உற்பத்தி பரிமாற்றம், விநியோகம் ஆகியவற்றின் சாதனங்களும் பொது உடைமைகளாக இருக்குமானால் அச்சமுதாயத்தைச் ‘சமதர்ம சமுதாயம்’ என்று அழைக்கலாம். அவ்வாறின்றி தனி உடைமையை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தில் பொருளாதார நெருக்கடியின் காரணமாகவோ அல்லது ஜனநாயக சக்திகளின் பலத்தாலோ ஏற்றத் தாழ்வுகளைக் குறைத்துப் பொதுநல வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சிகள் நடக்குமாயின் அச்சமுதாயத்தைப் ‘பொதுநலம்பற்றிய முதலாளித்துவம்’ என்று அழைப்பர். மேற்கு ஐரோப்பிய பொருளாதாரங்களில் பல இந்த ரகத்தைச் சார்ந்தவையே.

## அரசாங்க முதலாளித்துவம்

சில சமயங்களில் பலமிக்க முதலாளிகள் சிலர் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவர்; பொருளாதாரத்தின் உயிர் நாடிகளாக விளங்கும் பகுதிகளை நாட்டுடைமையாக்குவர்: அல்லது அவற்றின்மீது கண்டிப்பான அரசாங்கக் கட்டுப்பாட்டை அமுல் நடத்துவர்; ஏனைய

முதலாளிகளோ தொழிலாளிகளோ மூச்சுவிடாமல் அடக்குவர்... பின்னர் அப் பொருளாதாரத்தின் சக்திகளை நாட்டாசை போன்ற குறுகிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவர். இத்தகைய பொருளாதாரங்கள் வளரலாம். ஆனல் அவற்றின் பிடிப்பு பாஸிசக் கும்பலின் கையில் இருக்கும். இரண்டாவது உலகப் போருக்கு முன்னுல் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலிய நாடுகளின் பொருளாதாரங்கள் பாஸிஸ சக்திகளின் பிடிப்பிலேயே சிக்கியிருந்தன.

### சமதர்மத்தின் உரைகல்

ஒருசில பொருளாதாரங்களில் சமதர்மக் கட்சிகள் ஆட்சி பீடத்தைப் பிடித்துப் பொருளாதாரத்தின் நாடி நரம்புகளை உடனடியாகக் கைப்பற்றிக் கொள்ளும். ஆனல் சின்னஞ் சிறு தொழில்களிலோ பண்ணைகளிலோ உடனடியாகக் கை வைப்பதில்லை. நாளடைவில் (பொருளாதாரம் முழுவதையும் கட்டியாளும் தகுதியும் சக்தியும் பெற்ற பின்னர்) எஞ்சியுள்ள முதலாளித்துவத் திட்டுகளைக் கொஞ்சங் கொஞ்சமாக நாட்டுமயமாக்குவர். இடைப்பட்ட காலத்தில் அமையும் இத்தகைய பொருளாதாரத்தை அரசாங்க முதலாளித்துவம் அல்லது முற்றுகையிடப்பட்ட முதலாளித்துவம்' என்று அழைக்கலாம். புதுப் பொருளாதாரக் கொள்கையின் போது (1921—28) இருந்த சோவியத் பொருளாதாரமும், 1949—56 வரை இருந்த சினப் பொருளாதாரமும், இன்றுள்ள கிழக்கு ஐரோப்பியப் பொருளாதாரங்கள் பலவும் இவ்வகையைச் சேர்ந்தவையே.

### வளர்ச்சிப் பாதையில்

எனவே, பொருளாதாரம் வளர்ச்சி யுறலாம். பொருளாதாரத்தின் குடுமியை அரசாங்கம் ஆட்டி வைக்கலாம். அரசாங்க முதலீடும் பேரளவில் நடைபெறலாம். இவற்றின் காரணமாக அப்பொருளாதாரம் சமதர்மத்தின் சாயலைப் பெற்றுவிடாது. ஆட்சி பீடத்தில் அமர்ந்திருப்பது யார்? உற்பத்தி உறவுகள் எவ்வகையில் அமைந்துள்ளன? ஆக்கப்படும் பண்டங்கள் எவ்வாறு பங்கிடப் படுகின்றன? என்பன போன்ற கேள்விகளுக்குக் கிடைக்கும்விடைகளைப் பொறுத்தே அப் பொருளாதாரத்தில் சமதர்மம் மலருகின்றதா? இல்லையா? என்று முடிவு செய்ய இயலும். அவ்வாறின்றி, முதலாவது உற்பத்தி; பின்னுல் பங்கீடு; சர்வாதீன சக்திகள்; பலம் பெற்றுலும் பரவாயில்லை; பொருளாதாரம் வளர்ந்தால் போதும். ஏற்றத் தாழ்வுகள் இல்லாமல் பொருளாதாரம் வளருவதெப்படி? அரசாங்கக் கட்டுப்பாடுகளே வளர்ச்சிப் பாதையில் உள்ள குறுக்கீடுகள் ... என்பன போன்ற குரல்கள் காதில் விழுமானுல் அவை எல்லாம்முதலாளித்துவத்தின் முணுமுணுப்பே யன்றிச் சமதர்மத்தின் சல சலப்பு ஆகாது! —'''குத்தூசி''

## உங்களுக்குத் தெரியுமா?

பெண்களை தெய்வமாக்கி வழிபட்டு வந்திருக்கிருர்கள் நம் முன்னேர்கள். ஆனல், இந்த மண்ணிலே பிறந்த ஒருவர் "பெண்ணுகி வந்ததொரு மாயப் பிசாசம்" என்று பெண்ணைப் பற்றி தம் அபிப்ராயத்தை ஒளிவு மறைவு இல்லாமல் சொன்னுர்.

அவர் யார்?

உங்களுக்குத் தெரியுமா?

விடை : பட்டினத்தார்.

# அமெரிக்க ஜனாதிபதிகள்

| | | |
|---|---|---|
| 1. | ஜார்ஜ் வாஷிங்டன் | 1789-1797 |
| 2. | ஜான் ஆடம்ஸ் | 1797-1801 |
| 3. | தாமஸ் ஜெபர்ஸன் | 1801-1809 |
| 4. | ஜேம்ஸ் மாடிஸன் | 1809-1817 |
| 5. | ஜேம்ஸ் மன்ரோ | 1817-1825 |
| 6. | ஜான் குயின்ஸி ஆடம்ஸ் | 1825-1829 |
| 7. | ஆண்டிரு ஜாக்ஸன் | 1829-1837 |
| 8. | மார்ட்டின் வான் பூரன் | 1837-1841 |
| 9. | வில்லியம் ஹென்ரி ஹாரிஸன் | 1841-1841 |
| 10. | ஜான் டைலர் | 1841-1845 |
| 11. | ஜேம்ஸ் கே. போல்க் | 1845-1849 |
| 12. | ஸக்கரி டேலர் | 1849-1850 |
| 13. | மில்லர்டு பில்மோர் | 1850-1853 |
| 14. | பிராங்க்ளின் பீயர்ஸ் | 1853-1857 |
| 15. | ஜேம்ஸ் புக்கானன் | 1857-1861 |
| 16. | ஆபிரகாம் லிங்கன் | 1861-1865 |
| 17. | ஆண்டிரு ஜான்ஸன் | 1865-1869 |
| 18. | உலிஸஸ் எஸ். கிராண்ட் | 1869-1877 |
| 19. | ருதர்போர்டு பி. ஹேய்ஸ் | 1877-1881 |
| 20. | ஜேம்ஸ் ஏ, கார்பீல்டு | 1881-1881 |
| 21. | செஸ்ட்டர் ஏ. ஆர்தர் | 1881-1885 |
| 22. | குரோவர் கிளீவ்லண்ட் | 1885-1889 |
| 23. | பெஞ்சமின் ஹாரிஸன் | 1889-1893 |
| 24. | குரோவர் கிளீவ்லண்ட் | 1893-1897 |
| 25. | வில்லியம் மக்கின்லி | 1897-1901 |
| 26, | தியடோர் ரூஸ்வெல்ட் | 1901-1909 |
| 27. | வில்லியம் எச். டாப்ட் | 1909-1913 |
| 28. | வுட்ரோ வில்ஸன் | 1913-1921 |
| 29. | வாரன் ஜி. ஹார்டிங் | 1921-1923 |
| 30. | கால்வின் கூலிட்ஜ் | 1923-1929 |
| 31. | ஹெர்பர்ட்டு சி. ஹூவர் | 1929-1933 |
| 32. | பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் | 1933-1945 |
| 33. | ஹாரி எஸ். ட்ரூமன் | 1945-1953 |
| 34. | டுவைட் டி. ஐஸன்ஹாவர் | 1953-1961 |
| 35. | ஜான் எப். கென்னடி | 1961-1963 |
| 36. | லிண்டன் பி. ஜான்ஸன் | 1963- |

# லிண்டன் பி. ஜான்சன்

1963 நவம்பர் 22-ந் தேதி 36-வது அமெரிக்க ஜனாதிபதி லிண்டன் பி. ஜான்ஸன் பதவியேற்றார்; உள்நாட்டு, வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலும் அவர் விரிவான ஞானமுள்ளவர்.

டெக்ஸாஸ் எல்லைப்புறவாசிகள் வழியில் தோன்றியவர், ஜான்ஸன்; பொதுப் பணியில் அவருக்குள்ள அக்கறை பரம்பரையாக வந்தது. மூன்று தலைமுறைகளாக அவரது முன்னோர்கள் தென்மேற்கு மாநிலமான டெக்ஸாஸ் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கு கொண்டவர்கள்; அமெரிக்காவின் ஒரு பகுதியாகும் முன்பே அவர்கள் அவ்வாறு பாடுபட்டவர்கள். எனவே, பொதுப் பணியில் வழி வழியாக வந்த ஆர்வம் அவரது ரத்தத்திலேயே ஊறிப்போன ஒன்றாகும்.

அவரது தந்தையும், தாத்தாவும் டெக்ஸாஸ் சட்ட மன்றத்தில் பணியாற்றியவர்கள். அவரது தந்தையின் முன்னோர்களில் ஒருவர் டெக்ஸாஸ் சுதந்திரப் பிரகடனத்தில் கையெழுத்திட்டவர். தாய் வழியில் அவரது முன்னோர்கள் பாப்டிஸ்ட் மதகுருக்கள்; பள்ளி ஆசிரியர்கள்.

ஜனாதிபதி ஜான்ஸன் தம் வாழ்க்கையில் மூன்றில் இரு பங்கு பொதுப் பணியில் ஈடுபட்டவர். மாநில, மத்திய சட்ட மன்றங்களில் நாட்டுத் தலைமைக்கு அவர் பயிற்சி பெற்றவர். அமெரிக்காவில் குடியுரிமைகள் ஓங்கி வளரச்செய்வது முதல் அமைதிப் பணிகளுக்காக விண்வெளி ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிப்பது வரையில் அவர் அக்கறை கொண்டுள்ள துறைகள் விரிவானவை. கென்னடியின் துணை ஜனாதிபதியாகக் கிட்டத்தட்ட மூன்றாண்டுகள் பணிபுரிந்த அவர் ஆட்சிக் குழுவின்மேல் வட்டாரத்தில் ஒருவர்; உள்நாட்டு, வெளிநாட்டுத் துறைகள் இரண்டிலும் ஆட்சி சீராக நடைபெற வழிகாட்டியுதவிய வட்டாரம் அது.

சட்டமன்ற உறுப்பினராகவும் பின்பு துணை ஜனாதிபதியாகவும் அமெரிக்காவில் குடியுரிமை இலட்சியத்துக்காக விடாது அரும்பாடு பட்டவர் அவர். 1957-ல் முதல் குடியுரிமைகள் மசோதா சட்ட மன்றத்தில் நிறைவேறச் செய்தவர், அவர்; இதற்கு முன் 80 ஆண்டுகளில் இது போன்ற ஒரு மசோதா சட்டமானதில்லை. மூன்றாண்டுகள் கழித்து இது போன்ற மற்றொரு மசோதா நிறைவேறச் செய்தார்; எதிர்க்கட்சியாளர்கள் நீண்ட வாதப்பிரதிவாதங்கள் செய்து அது நிறைவேறாமல் தடுக்க முயன்ற முயற்சிகளை அவர் சாதுரியமாக வென்றார். சமத்துவம், மனித உரிமைகள் ஆகிய கொள்கையில் அவர் கொண்டுள்ள ஈடுபாடு குறித்துக் குடியுரிமைத் தலைவர்களுக்குச் சிறிதும் சந்தேகம் கிடையாது. அவர்களது மதிப்பை அவர் பெற்றுள்ளார்; நல்ல உறவும் கொண்டுள்ளார். எனவே உணர்ச்சி வசமான குடியுரிமைப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் அது அவருக்குப் பெரும் துணையாக விளங்கும்.

ஜனாதிபதி என்ற முறையில் மக்கள் குலத்தின் மேம்பாட்டுக்கான பணிகளை அவர் நிறைவேற்றி வருவார் என எதிர்பார்க்க முடியும்; நிறைவேற்றி வைக்க அவரும் காலஞ்சென்ற ஜனாதிபதி கென்னடியும் தம்மைப் பணித்துக் கொண்டிருந்தனர். சட்ட மியற்றுபவர் என்ற முறையில் தம் நீண்ட பதவிக் காலத்தில் தாம் மேற்கொண்ட மிக முக்கியமான

விஷயம் குடியுரிமைகள் மசோதாவைச் சட்டமாக்குவதில் தமக்குள்ள பங்கே என்று தாம் கருதுவதாக 1963 மார்ச்சு மாதத்தில் ஜான்ஸன் கூறினார்.

ஜனாதிபதி பதவி ஏற்கும் முன்னர் மே மாதத்தில் வரலாற்றுப் புகழ் பெற்ற கெட்டிஸ்பர்க் நகரில் அவர் ஒரு உரை நிகழ்த்தினர். பென்ஸில் வேனியா மாநிலத்தில் அந்நகர் இருக்கிறது. அங்குதான் நூறு ஆண்டு களுக்கு முன்பு அமெரிக்க உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த பெரும் சண்டை நடைபெற்றது. ஜான்ஸன் தம் உரையில் பின் வருமாறு அறிவித்தார் :

''இத் தருணத்தில் நமக்கு ஏற்பட்டுள்ள இடுக்கண் எந்த ஒரு குறிப் பிட்ட இனத்துக்கும் அல்ல—நமது நாட்டுக்கே ஏற்பட்டுள்ள இடுக்கண் அது. நம்நாட்டு-வடக்கும் தெற்கும்-வெள்ளையரும் நீக்ரோக்களும்—முன் னேறுவதில் விருப்பமுள்ளவர்கள் முன்வந்து, முடிவு எடுக்க வேண்டிய சோதனையான இத்தருணத்தில் வழி காட்டுவார்களாக.

நீக்ரோ 'இன்றே செய்' என்று கூறுகிறார், மற்றவர்கள் 'என்று மில்லை' என்கின்றனர். பொறுப்புள்ள அமெரிக்கர்களின் குரல்—இங்கு மரணமடைந்தவர்களின் குரல்களும், இங்கு சொற்பொழிவாற்றிய (ஜனாதி பதி ஆபிரகாம் லிங்கன்) பெருந் தலைவரின் குரலும்-'சேர்ந்து செய்வோம்; வேறு வழியில்லை' என்று முழங்குகின்றன.''

1908 ஆகஸ்ட் 27-ந் தேதி டெக்ஸாஸ் மாநிலத்தில் ஸ்டோன்வால் என்னுமிடத்தில் எளிய பண்ணை வீடு ஒன்றில் ஜனாதிபதி ஜான்ஸன் பிறந் தார். அப்போது கடும் பொருளாதார வீழ்ச்சி நாட்டை விழுங்கியிருந் தது. ஒன்பது வயதில் அவர் டெக்ஸாஸ் முடிவெட்டும் கடை ஒன்றில் பூட்ஸுகளுக்கு 'பாலிஷ்' போடும் வேலை செய்தார்; 15 வயதில் அவரது உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்துவிட்டது; சாலைகள் அமைக்கும் 'காங்கி' கூட்டத்தில் ஒருவராக வேலை செய்யச் சென்றார். கிடைத்த வேலையைச் செய்துகொண்டே அவர் கலிபோர்னியா போய்ச் சேர்ந்தார். விசை ஏணி ஏவலாள், கார் கழுவுபவர், உணவுச்சாலை சிற்றாள், இப்படிப் பல வேலைகள் பார்த்தார். பின்பு, மீண்டும் டெக்ஸாஸ் திரும்பி, சாலை அமைக்கும் வேலையில் சேர்ந்தார். ஆனால், எதிர்காலம் பற்றிச் சிந்திக் கத் தொடங்கினர். பயனுள்ள வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆயத்தம் கல்வி கற்பதே என்பது வரவர அவருக்கு நன்கு தெளிவாயிற்று.

தொடர்ந்து படிக்க உறுதிகொண்டு, அவர் அலைந்து திரிந்து டெக் ஸாஸ் மாநிலத்திலுள்ள ஸான் மார்க்கோஸ் என்னுமிடம் போய்ச் சேர்ந் தார். அங்கு தென்மேற்கு அரசாங்க ஆசிரியர் கல்லூரியில் சேர்ந்தார். பணம் போதவில்லை. எனவே, ஓய்வு நேரத்தில் கல்லூரியில் வாயில் காப்போனாக வேலை பார்த்தார். வீடு வீடாகச் சென்று பனியன், மேஜோடு முதலியன விற்றார். கல்லூரித் தலைவருக்குச் செயலாளராக வேலை பார்த் தார். இருந்தும் பணம் போதவில்லை; அநேகமாக ஓராண்டு கல்லூரியி லிருந்தே விலகவேண்டி வந்தது. அப்போது அவர் டெக்ஸாஸ் சிறுநகர் ஒன்றில் பள்ளி ஆசிரியராக வேலை பார்த்தார்.

கல்லூரி வந்து சேர்ந்து, மூன்றரை ஆண்டுகளே ஆகியிருக்கையில் லிண்டன் ஜான்ஸன் விஞ்ஞானத் துறையில் (பி. எஸ்ஸி.) பட்டம் பெற் றார்; அப்போது அவருக்கு வயது 22. அடுத்து, உயர்நிலைப் பள்ளி ஒன் றில் மேடைப் பேச்சு, விவாதம் நிகழ்த்துவதுபற்றி இரண்டாண்டுகள்

கற்பித்தார். பின்னர் 1932-ல் யு. எஸ். சட்ட மன்றத்தில் டெக்ஸாஸ் பிரதிநிதியாக இருந்த ஒருவரின் செயலாளராக அவர் பொதுப் பணியைத் தொடங்கினர். அப்போது வாஷிங்டன் நகரிலுள்ள ஜார்ஜ்டவுன் பல்கலைக் கழகச் சட்டக் கல்லூரியில் சேர்ந்து படித்தார்.

இந்தச் சமயத்தில்தான் அவர், கிளாடியா ஆல்ட்டா டேலர் என்னும் பெண்மணியைச் சந்தித்துப் பின்னர் இருவரும் திருமணம் செய்துகொண்டனர். டெக்ஸாஸ் மேய்ச்சல் நிலச் சொந்தக்காரர் ஒருவரின் மகள் அப்பெண்மணி.

1935-ல் தேசிய இளைஞர் நிலையத்தின் டெக்ஸாஸ் மாநில நிர்வாகியாக ஜான்ஸன் நியமிக்கப்பட்டார்; நியமித்தவர், ஜனதிபதி பிராங்ளின் ரூஸ்வெல்ட். இரண்டாண்டுகளுக்குப் பிறகு—அப்போது வயது 29. அப்பதவியிலிருந்து அவர் விலகி, சட்டமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிட்டார். பிரதிநிதிகள் சபை உறுப்பினர் ஜேம்ஸ் பி. புக்கானன் என்பவர் காலமானதால் இந்தத் தேர்தல் நடந்தது. போட்டியில் அவர் ஒன்பது அபேட்சகர்களைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். 1938-ல் முழுப் பதவிக் காலத்துக்கு அவர் தேர்ந்தெடுக்கப் பெற்றார்.

இரண்டாவது உலகப்போர் மூண்டதும், போரில் ஈடுபட்ட பிரதிநிதிகள் சபை உறுப்பினர்களில் முதல்வர், ஜான்ஸன். அவரது உயரம் 6 அடி, 3 அங்குலம்; எடை 200 ராத்தல். ஆஸ்டிரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் அவர் போர்ப்பணி புரிந்தார். நியூகினியிலுள்ள எதிரி இலக்குகள்மேல் பறந்து போரிட்ட வீரத்தைப் பாராட்டி அவருக்கு வெள்ளி நட்சத்திர விருது கிடைத்தது. ஜெனரல் டக்ளஸ் மக்கார்தர் தாமே நேரில் விருது வழங்கிச் சிறப்புச் செய்தார். லெப்டினன்ட் கமாண்டர் பதவியில எட்டு மாதங்கள் யு.எஸ். கடற்படையில் பணியாற்றியபின், அவர் மீண்டும் சட்டமன்றப் பணிக்குத் திரும்பினர். சட்டமன்ற உறுப்பினர்கள் ராணுவத்தில் பணியாற்றுவதைத் தடைசெய்து ஜனதிபதி ரூஸ்வெல்ட் ஒரு உத்தரவு வெளியிட்டதுமே, ஜான்ஸன் திரும்பிவந்தார்.

யு. எஸ். பிரதிநிதிகள் சபையில் அடுத்தடுத்து ஐந்து தடவைகள் பணியாற்றியபின்பு, 1948-ல் ஜான்ஸன் செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஐந்தாண்டுகள் கழித்து 1953-ல் செனட் சபையில் ஜனநாயகக் கட்சித் தலைவரானர். அப்பொழுது அவருக்கு வயது 44; வரலாற்றிலேயே இவ்வளவு குறைந்த வயதில் கட்சித் தலைவரானவர், இவர்தாம்.

அடுத்த எட்டு ஆண்டுகள்-ஜனதிபதி ஐஸன்ஹாவர் ஆட்சியில்-அமெரிக்க அரசியல் அரங்கில்-ஜனதிபதிக்கு அடுத்து மிகவும் முக்கியமானவராகவும், ஆற்றலுள்ளவராகவும் ஜான்ஸன் விளங்கினர்.

மனித இயல்பு, அன்றாடப் பிரச்சினைகள் இவற்றை ஜான்ஸன் நன்கு உணர்ந்தவர்; வரலாற்று உணர்வும் ஞானமும் பெற்றவர் என்பதை அவரது நண்பர்கள் நெடுங்காலமாகவே அறிவார்கள்.

அரசியல் கலையில் இவ்வளவு உறுதியான அறிவும் ஆற்றலும் பொருந்தி ஜனதிபதியானவர்கள் சிலரே என்பது நிச்சயம். முழுக்க முழுக்க இவ்வாறு பொதுப்பணியில் ஈடுபட்டு வாழ்ந்தவர்கள் சிலரே.

1954-ல் ஜான்ஸன் ஆறுண்டுக் காலத்துக்கு மீண்டும் செனட்சபை உறுப்பினராக மிகப் பெரும்பாலான வாக்குகளுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டின் தலைவர் என்ற முறையில் அவரது பெருமை நெடுங்கால

மாகவே அனைவரும் ஒப்புக்கொண்டது; எனவே 1960-ல் நடைபெற்ற ஜனநாயகக் கட்சி மகாநாட்டில் ஜனாதிபதி பதவிக்கு அவர் ஜான் எப். கென்னடிக்கு எதிராக அபேட்சகராகப் போட்டியிட்டார். கென்னடி தாம் வெற்றி பெற்றதும் அதே ஆண்டுத் தேர்தலில் துணை ஜனாதிபதி பதவிக்கு ஜனநாயகக் கட்சி அபேட்சகராகப் போட்டியிட்ட ஜான்ஸனைத் தெரிந்தெடுத்தார். இருவரும் ஒன்று சேர்ந்து தேர்தல் பிரசாரம் நடத்தினார்கள்; அதுமுதல் ஒன்றுசேர்ந்து, ஆட்சித் தலைவராகக் கென்னடியும், செனட் சபைத் தலைவராக ஜான்ஸனும் உழைத்து வந்துள்ளனர்; கென்னடியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான-தகுதியுள்ள துணைவராகவும் ஜான்ஸன் இருந்து வந்தார்.

ஜனாதிபதி பதவியின் உயர் கடமைகள் பற்றி மற்றொருவருக்குக் கற்பிக்க முடியுமென்றுதான், கென்னடி அவ்வாறு செய்தார் எனலாம்; எப்படி? அவர் ஜான்ஸனிடம் கடும் பணிகளை ஒப்படைத்தார். இது இருவருமே ஒருநாள் வருமென எதிர்பார்க்காத ஒரு வருங்காலப் பணிக்கு ஜான்ஸனைப் பயிற்றுவித்தது.

ஓயாமல் சுற்றுப்பிரயாணம் செய்பவர், ஜான்ஸன்; பல முறை உலகம் சுற்றி அவர் கென்னடியின் பிரதிநிதியாக 27 நாடுகளுக்குப் போய் வந்தார்; நெருக்கடி மலிந்த பெர்லின் நகரின் மதில் சுவர் வரையில் சென்றார். பசிபிக் பகுதிகளிலும் கீழ்க் கோடியிலும் அவர் சுற்றினார். தெற்கு ஆசியாவிலுள்ள அமெரிக்க நேச நாடுகளுக்கும் அவர் நம்பிக்கையூட்டினார். மத்திய கிழக்கு, மத்தியதரைக் கடல் பகுதிகளிலுள்ள சுதந்திர உலக நாடுகளின் உறுதிக்கு வலுவூட்டினார். ஸ்காண்டிநேவிய மக்களுக்கு நம்பிக்கையூட்டும் நட்புறவுச் செய்திகள் கொண்டு சென்றார். தம் நாட்டுக்கும் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் இடையேயுள்ள நட்புறவுகளை உறுதிப்படுத்தினார். உலகத் தலைவர்கள் அநேகரை அவர் கண்டு பேசினார்.

துணை ஜனாதிபதியாக முதன் முதலாக அவர் வெளிநாடு சென்றது 1961 ஏப்ரல் மாதத்தில். அப்போது அவர் பதவியேற்று இரண்டு மாதங்கள்கூட ஆகவில்லை. அவர் செனேகல் நாட்டுக்குச் சென்றார்; அந்த ஆப்பிரிக்க நாட்டில்தான் சுதந்திரம் பெற்ற முதல் ஆண்டு நிறைவைக் கொண்டாட நடத்திய விழாக்களில் அவர் கலந்துகொண்டார். டக்கார் நகரிலிருந்து புறப்பட்டு அவர் பாரிஸ் நகருக்குப் பறந்தார்; ஐரோப்பாவிலுள்ள நேச நாடுகளின் பிரதமத் தலைமையகத்தின் 10-வது ஆண்டு நிறைவுத் தருணம் அது. பாரிஸ் செல்லும் வழியில் ஜான்ஸன் ஜினீவா நகரில் தங்கினார்; அங்கு, அப்போது அணுச் சோதனைத் தடை ஒப்பந்தத்துக்கான மூவரசுப் பேச்சு நடந்து வந்தது; அதுபற்றி யு. எஸ். பிரதிநிதிகள் குழு அவருக்கு விளக்கம் கொடுத்தது.

1961 மே மாதம் அவர் ஆசியாவில் தெற்கு, தென் கிழக்கு நாடுகளில் விரிவாகச் சுற்றுப்பிரயாணம் செய்தார். வியட்நாம், பிலிப்பைன், சீனக் குடியரசு, ஹாங்காங், தாய்லாந்து, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு அவர் சென்றார்.

முதலில் அவர் சைகோன் நகரில் தங்கினார்; வியட்நாமில் கொரில்லா படைகளோடு அங்குள்ள மக்கள் நடத்திவரும் போர் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளதென்பதற்கு இதுவே சான்று, வியட்நாம் குடியரசின் தேசியச் சட்ட மன்றத்தில் அவர் உரை நிகழ்த்தினார். பின்பு, மணிலா நகருக்குச் சென்றார்; அங்கு பிலிப்பைன் குடியரசு ஜனாதிபதி

கார்லாஸ் பி. கார்சியாவைக் கண்டு பேசினர். பிலிப்பைன் சட்ட மன்றத்தின் கூட்டுக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். தைப்பே நகரில் அவர் ஜனதிபதி சியாங்-கே-ஷேக்குடன் ஆலோசனை நடத்தினர். அங்கிருந்து ஹாங்காங் போய் பின்னர் பாங்காக் நகருக்குப் பறந்தார். அங்கு பீல்டு மார்ஷல் ஸரித் தனரட் என்பவரைப் பலமுறை தனிப்படச் சந்தித்தார். அப்பகுதிக்கு ஏற்பட்டுள்ள கம்யூனிஸ்ட் ஆபத்து குறித்து இருவரும் விரிவாக ஆலோசித்தனர்.

இந்தியாவில் பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேருவுடன் ஜான்ஸன் பேச்சு நடத்தினர். தங்களது பேச்சுகள் குறித்து அவர் கூறினர்: "அவரது (நேருவின்) நம்பிக்கைகள், அவாக்கள் குறித்தும் உதவி செய்வதில் நமக்குள்ள ஆர்வம் குறித்தும் நாங்கள் பேசினேம் ... மக்கள் குலத்தின் பொது எதிரிகள் அறியாமை, வறுமை, பிணி என்றும் அவற்றை எதிர்த்துப் பெரும் போராட்டம் நடத்தவேண்டும் என்றும் பேசினேம்."

இந்தியாவின் மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜனதிபதி கென்னடி கொண்டுள்ள அக்கறை குறித்து ஜான்ஸன் நேருவுக்கு எடுத்துரைத்து, இந்திய ஜனநாயகம் மேலும் வளர்ந்தோங்குவதில் அமெரிக்கா கொண்டுள்ள அக்கறையை உறுதிப்படுத்தினர்.

இந்தியாவின் வளர்ச்சிக்கு உதவுவதில் யு. எஸ். கொண்டுள்ள அக்கறையை ஜான்ஸன் உறுதிப்படுத்தினர்; இந்தியாவின் நட்பு குறித்து அமெரிக்கர்கள் பெருமைப்படுவதாக அறிவித்தார். "நாங்கள் உற்ற நண்பர்கள் என்று மாபெரும் இந் நாட்டு மக்களிடம் நான் தெரிவிக்க என் ஜனதிபதி விரும்பினர்" என்ருர்.

"நாம் ஒருவரையொருவர் நன்கு அறிந்து கொள்ள வேண்டும், அப்படியானல்தான் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து இன்னும் சிறப்பாகப் பாடுபட முடியும்" என்றும் அவர் கூறினர்.

இந்தியாவில் ஜான்ஸன் தங்கிய இரண்டு நாட்களில் தமக்குக் கிடைத்த அற்புதமான வரவேற்பு கண்டு பெரு மகிழ்ச்சி அடைந்தார். "என் உயிருள்ள வரை நான் இதை என் நினைவில் வைத்துப் போற்றுவேன்" என்ருர்.

வாஷிங்டன் திரும்பும் வழியில் பாகிஸ்தான் ஜனதிபதி அயூபுடன் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு ஆகிய வைபற்றி ஜான்ஸன் பேசினர், பின்பு, கிரீஸ் நாட்டின் தலைநகர் ஏதன்ஸ் சென்று அங்கு சிறிது தங்கினா.

1961 ஆகஸ்ட் மாதத்தில் ஜான்ஸன் ஜெர்மனிக்குப் பறந்தார்; முதலில் பாரீஸ் நகரில் சிறிது காலம் தங்கி, அதிபர் அடினுரைச் சந்தித்தார். பின்பு, மேற்கு பெர்லின் சென்று, அங்கு அந்தச் சுதந்திர நகரின் சட்டமன்றத்தில் பேசுகையில், "நாம் பயமின்றி எப்போதும் அமைதி காண முற்பட வேண்டும்; ஆனல் இன்றும் என்றும் சுதந்திரத்தைப் பாதுகாக்க மேலும் ஆயத்தமாக இருந்து வர வேண்டும்" என்று கூறினர்.

ஒருமாதம் கழித்து ஜான்ஸன் ஸ்வீடன்சென்றிருந்தார்; ஐ.நா. மன்றத் தலைமைச் செயலாளர் டாக் ஹாமர்ஷீல்டு ஈமச் சடங்கில் கென்னடியின் பிரதிநிதியாக அவர் கலந்துகொண்டார்.

1962 ஆகஸ்ட் மாதத்தில் ஜான்ஸன் இரு தடவை பிரயாணம் செய்தார். முதலில் ஜமைக்கா சென்றார்; கரீபியன் பகுதியிலுள்ள இத்தீவு ஆகஸ்ட் 6-ந் தேதி சுதந்திரம் பெற்றது. அதே மாதத்தின் பின் பகுதியில் லெபனான், ஈரான், துருக்கி, சைப்ரஸ், கிரீஸ், இத்தாலி ஆகிய மத்திய கிழக்கு மத்தியதரைக் கடல் நாடுகளில் அவர் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டார்.

லெபனான் மக்கள்பால் "அமெரிக்கா கொண்டுள்ள அன்பு, பாராட்டு, நட்புறவு" இவற்றை அவர்களுக்கு அவர் தெரிவித்தார்.

"லெபனான் நாட்டின் சுதந்திரம், ஒருமைப்பாடு இவற்றில் அமெரிக்கா நிலையான-மாறாத அக்கறை கொண்டுள்ளது" என்று லெபனான் மக்களுக்கு அவர் வாக்குறுதி அளித்தார்.

ஈரான் நாட்டில் அவர் கூறினார்: "சுதந்திர உலகின் வலிமைக்கு சுதந்திர ஈரான் இன்றியமையாதது. ஈரானின் சுதந்திரமும் ஒருமைப்பாடும் பிளவு படாது, சுதந்திரம் என்னும் பொது இலட்சியத்துக்காக உங்கள் நாடும் என் நாடும் ஒன்று பட்டு நிற்கின்றன."

டெஹ்ரான் நகரில் ஜான்ஸன் பெற்ற வரவேற்பு குறித்து "வாஷிங்டன் போஸ்ட்" நிருபர் முர்ரே மார்டர் பின்வருமாறு எழுதினார்: "தங்கள் மன்னர் ஷா முகம்மது ரேஸா பஹ்லவி சென்ற ஏப்ரல் மாதத்தில் வாஷிங்டன் போய்வந்ததற்கு ஒரு ஈடு என்றே ஜான்ஸன் வருகையை ஈரானிய மக்கள் கருதுவதாகத் தோன்றுகிறது...மக்கள் திரண்டு தமக்களித்த வரவேற்பு குறித்து திகைப்பதற்குப் பதில் அவர் (ஜான்ஸன்) பெரும் மகிழ்ச்சியடைந்ததாகவே தோன்றியது."

அமெரிக்காவின் உற்ற நேச நாடுகளில் ஒன்றான துருக்கியில் அவர் பேசுகையில், ட்ரூமன் சித்தாந்தத்தின் உறுதிமொழிகளுக்கு ஜான்ஸன் புத்துயிர் அளித்தார். இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு துருக்கியும் கிரீஸ் நாடும் இரும்புத் திரைக்குள் போய்விடாமல் காப்பதில் துணை செய்தது ட்ரூமன் சித்தாந்தமே.

ஜனாதிபதி கமால் கர்ஸல் கலந்துகொண்ட ஒரு விருந்தில் ஜான்ஸன் கூறினார்:

"அமெரிக்காவுக்கும், துருக்கிக்கும் இடையேயுள்ள உறவுகள் இன்று முன்பு என்றையும்விட வலுப்பெற்றுள்ளது என்பதை இன்று உலகம் அறியும்-அது அறியவேண்டுமென நாம் விரும்புவது இயற்கைதான். இந்த உறவுகளை மேலும் வலுப்படுத்தவே நாம் கூட்டாக உறுதி பூண்டுள்ளோம்..."

அங்காரா நகரிலுள்ள 'ஸென்ட்டோ' தலைமை நிலையத்துக்கு ஜான்ஸன் சென்றிருந்தார்; அங்கு "சுதந்திரத்தைப் பாதுகாக்க ஸென்ட்டோ கொண்டுள்ள உறுதிக்கு உத்தரவாதம்" கண்டார்.

சைப்ரஸ் தீவில் ஜான்ஸன் சிறிது காலமே தங்கினார்; ஆனால் "மக்களும் நாடுகளும் பரஸ்பரம் புரிந்துகொள்கையில் அங்கு நீண்ட ஆலோசனைகள் தேவையில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

"சுதந்திரத்துக்குப் பணித்துக்கொண்டுள்ள நண்பர்களின் பரிவையும் பரஸ்பர நம்பிக்கையையும் சைப்ரஸ், அமெரிக்கா இரண்டும் பெற்றுள்

ளன என்ற உறுதியுடன்'' தாம் செல்வதாக அவர் சைப்ரஸிலிருந்து புறப்படுகையில், ஒரு கூட்டத்தினரிடையே கூறினர்.

1963 இலையுதிர் காலத்தில் அவர் கடைசியாக வெளிநாடுகள் சென்று வந்தார். செப்டம்பர் 3 முதல் 17 முடிய ஸ்வீடன், பின்லாந்து, நார்வே, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளில் அவர் சுற்றுப்பிரயாணம் செய்தார். பதவியி லிருக்கையில் ஒரு மிகவுயர்ந்த யு. எஸ். அதிகாரி அந்நாடுகளுக்குச் சென்றது அதுவே முதல் தடவை. பல நாடுகளின் தலைவர்களை அவர் சந்தித்தார். நவம்பர் மாதத்தில் அவர் பெல்ஜியம், லக்ஸம்பர்க், நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றார். நவம்பர் 4-ந் தேதி லக்ஸம்பர்க் நகரில் அவர் பின்வருமாறு கூறினர் :

"இந்த இருபதாவது நூற்றாண்டில் அமெரிக்க மக்கள் தம் வலிமை, வளம், வாழ்க்கை ஆகியவை நிலையான ஒரு கருத்தைத் தாங்கி நிற்பதற்குப் பணித்துக் கொண்டுள்ளனர் ; சுதந்திரமான அட்லாண்டிக் நாடுகளின் ஒற்றுமை, கூட்டு இவற்றைப் பொறுத்தே உலகம்நெடுகிலும் சுதந்திரத்தின் வருங்காலம் இருக்கும் என்பதே அக்கருத்து."

வெளிநாட்டுச் சுற்றுப்பிரயாணங்கள் பலவற்றில் ஜான்ஸனுடன் அவரது மனைவியும் சேர்ந்தே சென்றார்.

ஆட்சி அலுவலகத்தின் மிக அந்தரங்கமான ஆலோசனைகளில் எல்லாம் ஜான்ஸன் இடம் பெற்றிருந்தார். நாட்டுப்பாதுகாப்பு சபையில் அவர் ஒரு உறுப்பினர்; வெள்ளை (ஜனதிபதி) மாளிகையில் வாரந்தோறும் நடைபெற்ற சட்ட மன்றத் தலைவர்களின் கூட்டங்களில் பங்கு கொண்டார் ஜனதிபதியின் ஆட்சிக் குழுக் கூட்டங்களிலும் அவர் கலந்து கொண்டார். விமான இயல், விண்வெளிக் குழு, சமவேலை வாய்ப்புபற்றிய ஜனதிபதியின் சபை, அமைதிப் படை, ஆலோசனை சபை, இவற்றிற்கெல்லாம் அவர் தலைவர்.

1961–ல் தம் பதவியேற்பதற்கு முன்பே கென்னடி கூறினர்: "அவர் (ஜான்ஸன்) தனி அக்கறை கொண்டுள்ள துறைகளின் கீழ் வரும் புதிய விஷயங்கள் குறித்து அவரும் நானும் சேர்ந்து உழைப்போம்..." "அக்கறையுள்ள 'அத் துறைகளில்' முதலில் நாட்டுப் பாதுகாப்பும் பந்தோபஸ்தும், விண்வெளியும் வெளிநாட்டு உறவுகளும் இடம் பெற்றிருந்து, பின்பு படிப்படியாக அவை அவர்கள் இருவரும் சேர்ந்துழைத்து மூன்றாண்டுகளில் மேலும் விரிவடைந்தன.

ஜனதிபதி ஜான்ஸன் நெடுங்காலமாக ஜனநாயகக் கட்சியில் செல்வாக்குள்ள ஒரு உறுப்பினராக இருந்து வந்துள்ளார். பிரதிநிதிகள் சபை உறுப்பினராகவும், செனட் சபை உறுப்பினராகவும், பின்னர் செனட் சபைப் பெரும்பான்மைக் கட்சித்தலைவராகவும், குறிப்பிடத்தக்க தலைமைப் பண்புகள் தமக்கிருப்பதையும் அவர் புலப்படுத்தினர். நீண்ட நெடும் விவாதங்கள் அல்லது சட்டமன்ற நடைமுறைத் தாமதங்கள் இவை இல்லாமல் முக்கியமான சட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதில் அவர் தமது சகாக்களைச் சேர்த்துக் கொள்ளுவதன் மூலம் அவ்வாறு புலப்படுத்தினர்.

அவரது சட்டமன்றத் தலைமைப் பொறுப்பில் அநேக முக்கியமான ஏற்பாடுகள் ஒப்புக்கொள்ளப் பட்டன. உதாரணமாக, ஹாவாய்,

அலாஸ்கா பகுதிகள் மாநில அந்தஸ்து பெற்றன; அமெரிக்காவின் பொருளியல் பட்டியல் ஒன்று தயாரிக்க உத்தரவாயிற்று; அமெரிக்கா மேற்கொண்டும் ஆதரவளித்ததன் மூலம் உலக பாங்கும் சர்வதேசச் செலாவணி நிதியும் வலுப்படுத்தப் பெற்றன. விண்வெளியை ஒரு முக்கிய துறையாக ஆராய்வது குறித்து ஐ. நா. கவனம் செலுத்த வேண்டுமென்று முதலில் யோசனை கூறிய செனட்டர்களில் அவர் ஒருவர். 1958 ஜனவரி 14-ந் தேதி பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் நிகழ்த்திய உரையில் கூறினர்: "விண்வெளியின் வியாபகத்தைப் பார்க்குமிடத்து, நிலவுலகில், நாடுகளிடையேயுள்ள வேற்றுமைகள் சுருங்கி விடுகின்றன. சமாதானத்தின் எல்லை இலக்கு என்ற முறையில் விண்வெளியை நாம் வெற்றிகொள்ள வேண்டுமானல் எல்லா மனிதர்களும் அம் முயற்சியில் பங்குகொள்ளலாம்-பங்கு கொள்ளவேண்டும்"

அவர் தெரிவித்த அந்த யோசனையின் விளைவாக யு. எஸ். சட்ட மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றியது; இதன் மூலம் ராணுவ வலிமையைப் பெருக்குவதற்கு விண்வெளியைப் பயன்படுத்துவதை உலகநாடுகள் தடைசெய்ய வேண்டும்-குறிப்பிட்ட ஒரு நாட்டின் அல்லது ஒரு கோஷ்டி நாடுகளின் நன்மைக்காக என்றில்லாமல் மக்கள் குலம் முழுவதும் நன்மை பெற்று ஓங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் விண்வெளி பற்றிய மனிதனின் அறிவை விரிவடையச் செய்யவேண்டும் என்ற கருத்தை அமெரிக்கா ஏற்றுக்கொண்டது.

முதலில் யு. எஸ். சட்ட மன்றத்திலும், பின்னர் துணை ஜனதிபதியாகவும் நாடுகளுக்கிடையே சமாதானமும் நல்லெண்ணமும் ஓங்கச் செய்வதில் தாம் ஈடுபட்டுள்ளவர் என்பதை அவர் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார். 1948 ல் அவர் முதல் தடவையாக செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன். மற்ற நாடுகளுக்குத் தொழில் நுட்ப உதவி வழங்கும் யு. எஸ். நாலாவது அம்சத் திட்டத்தைப் பலமாக ஆதரித்தார். இரண்டாவது உலகப் போருக்குப் பின்பு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பொருளாதார மீட்சிக்கு உதவுவதன் பொருட்டு மார்ஷல் திட்டத்தின்கீழ் நிதிகள் ஒதுக்குவதை முன்பே, 1947ல் யு. எஸ். பிரதிநிதிகள் சபையின் ஒரு உறுப்பினர் என்ற முறையில் அவர் ஆதரித்திருந்தார்; பிரதிநிதிகள் சபைக்கு அவர் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டது 1937-ல்.

அரும்பாடுபட்டு உழைக்கும் அமெரிக்க அரசாங்க அதிகாரி என்று புகழ்பெற்றவர், ஜனதிபதி ஜான்ஸன். 1955-ல் செனட்டராக இருக்கையில் அவருக்கு இருதய நோய் கண்டது; அது அவரை முடக்கிப் போட்டு விட்டது. ஆனல் சில மாதங்களுக்குள் அவர் முழுமையாகக் குணம் பெற்று, புத்துணர்ச்சியுடன் தம் செனட் சபைக் கடமைகளைக் கவனிக்கத் திரும்பினர். அதற்குப் பின்னர்தான் அவர் சட்ட மன்றத்திலும் ஆட்சித் துறையிலும் தம் தலைமைத் திறனல் மிகச் சிறந்த வெற்றிகள் கண்டார் என்று குறிப்பாகக் கூறுகிறார்கள். —"அமெரிக்கன் ரிப்போர்ட்டர்"

Edited and Published by Desam R. Chenoi Chettiar, President, 24 - Manai Telugu Chettiar Mahana Mahajana Sangam Harur, at 51, Pidariar Koil St., Madras-1. Printed by R. Ravi at his Sudar Printers 33, Jones St., Madras-1.

167910

திருச்சி ஆபீஸ் : போன் நெ. 105

# N. M. நடராஜன் செட்டியார்

(மெட்டல் மர்ச்செண்ட்)

96, மெயின் ரோடு, (மோட்டார் வேர்ஹவுஸ்எதிரில்)

பாலக்கரை P. O., திருச்சிராப்பள்ளி-1.

கண்டெம்டு மோட்டார் பேட்டரிகள்,
பழைய பித்தளை, செம்பு, அலுமினியம்,
சில்லரை & மொத்த வியாபாரிகள்.

மதராஸ் கிளை :

24, தங்கசாலை வீதி, பார்க் டவுன், மதருஸ்-3.

போன் நெ. 24352

# N. M. Natarajan Chettiar

(Metal Merchant)

All kinds of Non-Ferrous Metal Dealers.

Head Office :

**96, Main Road, Palakkarai P.O., Thiruchirapalli.**

Phone No. 105

Branch Office :

**24, Mint Street, Park Town, Madras-3.**

Phone No. 24352

Regd. No. M. 7798 "DESATHIPATHI" March 1964

Phone : 32880 | Whole Sale Ex No. 1
Residence „ 2
Showroom „ 3 | Grams : Shinemeta

# தி மதராஸ் மெட்டல் ஒர்க்ஸ்

**14, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்-3**




## சென்னையில்

எவர்சில்வர், அலுமினியம், பித்தளை பாத்திர
சாமான்களுக்கு சிறந்த இடம்.

குறைந்த விலை • அதிக விற்பனை

டிரேட் **P. M. M.** மார்க்

எங்களிடம் தயாராகும் PMM முத்திரையுள்ள சுத்தமான
அலுமினிய பாத்திரங்களும், எவர்சில்வர், பித்தளை பாத்திரங்களும்
மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

Show Room: **தி மதராஸ் மெட்டல் ஒர்க்ஸ்,**
**4, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ் - 3.**